
# அசுர ஜாதகம்



மின்நூல் உருவாக்கம்

சுபாஷ் சண்முகா




# இந்திராசௌந்தர்ராஜன்



1

கூற்றாலம்!

ஜூன் 18 புதன் கிழமை.

பொதிகை மலைமேல் சூரியன் கடுரச் சூடாக தகித்துக் கொண்டிருந்தான்.

வாஸ்தவத்தில் அவனுக்கு அப்படி தகிக்க இது நாள் வரையில் இடம் இருந்ததில்லை. வருணன் மேகப்பந்தல் போட்டு மலையையே மூடி நிற்பான். வாயு இதமாக உரசிச் செல்வான்.

சுணங்கிச் சுணங்கி மழை பெய்யும். குளிரும் நரம்பை நிமிண்ட முயற்சி செய்யும். அருவிகளில் வெள்ளம் கூத்தடிக்கும். மலை மரங்களெல்லாம் கூட பச்சை கொஞ்ச புடைத்து நிற்கும்.

ஆனால் இந்த முறை என்னாயிற்று?

கண்ணுக்கு வலது கையை கூரையாக விடுத்து முக்கிய அருவி முன் நின்று மேலே அண்ணாந்து பார்க்கிறான் கோகுல். 'பைஜாமா, குர்தா, ஜோல்னா பை தேய்ந்த மார்கோ சோப் போன்ற துண்டுத்தாடி, பொன்னிறத்தில் செவ்வகப் ஃபிரேமிட்ட கண்ணாடி' என்கிற 25 வயது லட்சணங்களோடு...

"எழுதிக்கோ... இந்த தடவை குற்றாலம் சவூதி அரேபியா போல காயும் மேகம் தவறிப்போய் பந்தல் போட்டாலும் காற்று கையைப் பிடிச்சு வேறு திசைக்கு இழுத்துப் போகும்... மீறி மழை பெய்தாலும் சூடு கிளம்பும். பிஞ்சுக் குழந்தைகள் கட்டி கொப்புளம்னு வாடிச் சாகும்..."

ஒரு கோமணம் கட்டிய கிழவர் சொன்னதாக ஆசிரியர் கோகுலை கிருஷ்ணா வலிய அழைத்துச் சொன்னது அவன் காதில் கசிகிறது. பார்வையை சுழல விடுகிறான்.

'ஜேஜே' என்று இருக்க வேண்டிய இடம்.

வனாந்திரமாய் காட்சி தருகிறது. திண்டு திண்டாய் பாறைகள். நீரோடு

புணராமல் வெக்கை கக்கியபடி கிடக்கின்றன.

'மசாஜ்... மசாஜ்' என்று ஒரு கூட்டமே வளைய வரும். யாரையும் காணோம்.

அதோ குற்றால நாதர்கோயில்...

முன் மண்டப உள் கட்டின் நிழல் பரப்பில் சில பிச்சைக்காரக் கிழவர்கள் சுருண்டு கிடக்கிறார்கள்.

வியர்வையை வழித்துப் போட்டபடி அங்கு சென்று நிழலுக்குள் நிற்க ஆரம்பிக்கிறான்.

"யாரது... சீஸன் இருக்கும்னு கிளம்பி வந்த கேஸா?"

ஒரு கிழடு பொடி போட்டபடி இளக்காரமாய் கேட்கிறது. கோகுல் பார்வை அவரை கொத்துகிறது.

"மூணு வாரமா ஊரே வானத்த தான் பார்த்துகிட்டிருக்கு... தண்ணி கொஞ்ச வேண்டிய ஊருல தண்ணிக்கு கெஞ்சிகிட்டு நிக்கறோம். கோயில் ஊத்து கூட அடைச்சிடுச்சே... என்னாத்த சொல்ல...?"

இன்னொரு கிழடு அங்கலாய்க்கிறது.

"ஆமா தம்பிக்கு எந்த ஊரு?"

"மெட்ராஸ்."

"ஜோலி?"

"ரிப்போர்ட்டர்."

"அப்படின்னா?"

"பத்திரிகை நிருபர்ன்னேன்..."

"அப்படியா... நல்லா பாத்து எழுது, காஞ்சு கிடக்குது பாரு தலையருவி. போட்டோ எடுத்துப் போடு. பிச்சைக்காசே ஒரு நாளைக்கு அம்பது ரூபா உழுவும். இப்ப அஞ்சு காசு கிடையாது. அதையும் எழுது.

நானறிய இப்படி ஒரு காட்சி பார்த்த தில்லை. ஏதோ கொஞ்சம் மழை தப்பும். ஆனா இப்படி வாட்டாது.

தாகத்துக்கே தாகம் எடுத்த மாதிரி ஆயிட்டுது நிலைமை.

"அதான் வெட்டு குத்துன்னு ரத்த ஆறு ஓடுதுல்ல... அப்புறமா எதுக்கு மழை? அதையே குடிச்சு தாகம் தீர்த் துக்கிட வேண்டியதுதான்னு இயற்கை சொல்லாம சொல்லுதோ...?"

கோகுல் கிழடுகளின் பேச்சை காதில் வாங்கியபடி வெளியே வருகிறான்.






இப்படியெல்லாம் கருத்து கேட்கவோ - வெய்யிலில் காயவோவா அவன் வந்திருக்கிறான்?

இல்லை என்கிற மாதிரி சுற்றிச் சுற்றி பார்க்கிறான்.

பத்து ரூபாய்க்கு மூன்று பொருள் என்று கூவி விற்பவர்கள் நிரம்பிக் கிடக்கும் சன்னதி தெருவும் - குட்டிகுட்டி லாட்ஜ்களின் சின்னச் சின்ன மாடிகளும் வெறிச்சோடி அவனைப் பார்க்கின்றன.

வியாபாரம் தூள் பறக்க வேண்டிய வேளை...

அழுகின மாம்பழம் ஐம்பது ரூபாய்க்கு போகுமே...?

ஜாதிக்காயும் - மாங்குஸ்தானும் சாக்கில் விரிந்து கிடக்கும். ஆளுக்குத் தகுந்த மாதிரி விலை படியுமே...?

இப்படியா...?

இப்படியா காய்ந்து வறண்டு அந்த கிழவர் சொன்ன மாதிரி போகும்?

"போ கோகுல்... போய் எப்படியாவது அவரை பார்த்து பேசு. அவர் சாதாரண ஆள் கிடையாது. பயங்கர எக்ஸ்ட் ராட்னரிமேன். சொன்னா சொன்ன மாதிரி நடக்குது.

தஞ்சாவூர் கோவில்ல கும்பாபிஷேகத் துக்கு முன்ன ஹோம குண்டத்தோட சேர்ந்து மனிதர்களும் எரிவாங்கன்னு அந்த நபர் சொன்னப்ப நான் நம்பலை. ஔறல்னு நினைச்சேன். சொன்ன மாதிரியே ஆயிடிச்சே?! இப்ப குற்றாலம் கொட்டாது காயும்கறான். இன்னிக்கு ஜூன் 17. இந்நேரம் கேரளாவே தண்ணிக் காடா இருக்கணும். திருநெல்வேலி

ஜில்லாவே ஜில்லிட்டு போயிருக்கணும். ஆனா காஞ்சி கிடக்கு. என்னால நம்ப முடியலை - நம்பாம இருக்கவும் முடியலை.

பேர... போய் அந்த ஆளைப்பிடி.

குற்றாலத்துலதான் நான் இருப் பேன்னு சொன்னான் தேடிக் கண்டுபிடி..."

"அடையாளம் சார்..."

"என்னத்த சொல்வேன்... இந்த சென்னைல கபாலீஸ்வரர் கோயில்ல சரபேஸ்வரர் சன்னதிகிட்ட எதார்த்தமா பார்த்தேன். நீங்கதானே பத்திரிகை ஆசிரியர்னு கேட்டுகிட்டு பக்கமா வந்தான். ஆமான்னேன், சிரிச்சான். ஜாக்கிரதைன்னு எச்சரிக்கை வேற செய்தான். எதுக்குன்னு கேட்டேன்."

"இண்ட்ரஸ்ட்டிங்... அப்புறம்?"

"தஞ்சாவூர் போகாதீங்க எரிஞ்சு போயிடுவீங்கன்னான். கூடவே கடகடன்னு குற்றாலம் காயும் - பருவ மழை தப்பிப் போகும். அண்ணன் தம்பிங்க அடிச்சிப்பாங்க. சத்யம் பேசும் அரசியல்வாதி அநியாயமா சாவான்னு ஒரேயடியா பேச ஆரம்பிச்சுட்டான். சரி ஏதோ எக்ஸென்ட்ரிக் - பத்திரிகைல பேர் வர அடிக்கற ஸ்டன்ட்டுன்னு நினைச்சேன். கிளம்பிட்டேன். இருந்தும் சில அடி தூரம் வந்துட்ட நான் நின்று சாமிக்கு எந்த ஊர்னு எதனால கேட்டேன்னு என்க்கே தெரியலை. குற்றாலம்னு அவன் சொல்லிட்டு அங்க

கோயில் மண்டபத்துலதான் படுத்து கிடப்பேன்னான்..."

"பேரைக் கேக்கலையா?"

"கேக்கத் தோணலை..."

"என்ன சார் இது... ஏதோ கோ இன்சிடென்ஸா இரண்டொரு விஷயம் நடந்துருக்கு. இதுக்காக ஒரு பேர் தெரியாத கிழவனை போய் தேடி பேட்டி எடுடான்னா என்ன அர்த்தம்?"

"இல்ல கோகுல்... இட்ஸ் நாட் எ கோ இன்சிடென்ஸ். சம்திங் மிராகிள்..."

"நாம பாக்காத மிராகிளா? திருநீர் மலை ஸ்வாமிகள் மாம்பழத்துக்குள்ள இருந்து மகாலட்சுமி விக்ரகம் வர வச்சதுல இருந்து, வேதாரண்யம் பாபா வேத புஸ்தகத்தை வார பத்திரிக்கையா மாத்திக் காட்டினது வரை எதை நாம படிக்கலை - ஆராயலை - எழுதலை...?"

"அவங்க விஷயம் வேற... இந்த நபர் விஷயம் வேற. ப்ளீஸ் வளவளன்னு கேள்வி கேக்காம போய் அந்த நபரை கண்டுபிடி. உன் கேள்விகளால கொத்தி எடு. சுவையான செய்திகோளட வா. எனக்கென்னவோ பகவான் ரமணரை பார்த்தது போலவே ஒரு உள்ளுணர்வு.

பகவான் ரமணரைப் போலவே...

பகவான் ரமணரைப் போலவே...?

கோகுல் அந்த கோமண சன்யாசியை ரமணர் உருவை மனதில் இருக்கிக்

கொண்டு தேட ஆரம்பிக்கிறான். சன்னதி தெருவில் நடந்து மலைப் பாங்கான தார்ச் சாலையை அடைந்து பொசுக்கும் உஷ்ணம் சகித்து உரசிச் செல்லும் செங்கோட்டை பஸ்ஸை கூட உணர மாட்டாமல் தேடுகிறான்.

இப்படியெல்லாம் தேடக் கூடியவனா இவன்?



## 3

"நம்ம எடிட்டருக்கு கிறுக்கு பிடிச்சுப் போச்சு. யாரோ ஒரு கிழவனை போய் பேட்டி எடு... அவன் உடப்போற உடான்ஸை எல்லாம் கேட்டுகிட்டு வா. ஜனங்கள காபரா பண்ணலாம்கறார்."

கோகுல் சக ரிப்போர்ட்டர் ரிஷியிடம் சலித்துக் கொள்ள ரிஷி கன்னத்தில் நிஜமாலுமே போட்டுக் கொண்டு "நல்ல வேளை நான் தப்பிச்சேன்" என்று கொஞ்சம் நக்கல் செய்திருந்தான்.

"ஹூம்... தீட்டுக் குளிக்காத நடிகை களை எல்லாம் பேட்டி எடுக்கறோம். நான் டாக்டராயிருக்க வேண்டியவ, வக்கீலாயிருக்க வேண்டியவங்கறவ அவளோட ரீல்ஸை எல்லாம் வெளியிட றோம். அதுக்கு இந்த கிழடை பேட்டி எடுக்கறதுதானா கேவலம்?" - என்று சமாதானம் செய்து கொண்ட போதிலும் மனம் சமாதானம் அடையவேயில்லை.

'இந்த இந்தியாவுலதான் இந்த மாதிரி அருள்வாக்கு ஆட்டுக்குட்டி சமாச்சாரங்கள்' என்று மனது உருட்டிக் கொண்டே இருந்தது. அரிசி பருப்புக்கு சமமாக விபூதி குங்குமம் விற்கும் நிஜம் குடைந்தது. ஒரு பக்கம் அரசியல் வாதிகளின் மகா மகா பொய்கள். மறு பக்கம் சாமியார்களின் வசீகரிப்பு. ஜனக் காடே ஆடாய், மாடாய் அறிவில்லாத ஜந்துகளாய் இப்பக்கம் அப்பக்கமுமாய் பிழியப்படுவது போல ஒரு உணர்ச்சி.

எல்லாம் பகுத்தறிவின் பிராண்டல்.

ச்சை!

கோகுல் வெந்து நொந்தபடி படுக்கப் போகும்போது எடிட்டர் போன் செய்தார்.

"என்ன கோகுல் கிளம்பலையா?"

"காலைல போறேன் சார்..."

"சொன்ன உடனே செய்யணும். ஏன் இப்படி டிலே பண்றே?"

"என்ன சார் நீங்க... நான் செயல்பட்டா உங்க கட்டளைக்காகத்தான் செயல் படணும். எனக்கு பர்சனலா இதுல ஈடுபாடே இல்லை."

"அதனாலதான் உன்னை அனுப்ப றேன் போ... போய் உன் பகுத்தறிவு பகுக்காத அறிவு எல்லாத்தையும் அந்த நபரை உண்டு இல்லை செய்.

"என்ன ஆசிரியரே... ஏன் இன்னும் உங்க ரிப்போர்டர் என்னை பேட்டி காண

வரலைன்னு அந்த நபர் ஜஸ்ட் பிஃபோர் என் கனவுல வட வந்து கேக்கறாரு...”

- கோகுல் எடிட்டர் உணரும்படியாகவே சிரித்துவிட்டான்.

“சிரிக்காதே... இட்ஸ் சீரியஸ்...”

“ஓ.கே. சார்... அந்த நபரை கொஞ்சம் என் கனவுலையும் வரச்சொல்லுங் களேன்...”

“என்ன கோகுல்... கிண்டலா? நான் சீரியஸா சொல்லிகிட்டு இருக்கேன். போ கோகுல் ஏதோ முக்கியமான விஷயம் இருக்கு. அதனாலதான் அந்த நபர் பார்க்க நினைக்கறாரு. கனவுல எல்லாம் வராரு...”

“ப்ளீஸ் சார்... போதும்! உங்க பேர்ல எனக்கு நிறைய அபிப்ராயங்கள் உண்டு. அது கெட்டுப் போயிடப் போவுது. கனவு அது இதுன்னு ரொம்பதான் பூ வெச்சுக்கிறீங்க. எனக்கும் வைக்கறீங்க. அந்த கிழடையே நினைச்சுகிட்டு படுத் திருப்பீங்க சப் கான்ஷியிஸ்ல அந்த தாட் ரெக்கார்டாயி கசிஞ்சிருக்கும். உடனே அந்த நபர் கனவல வந்து கூப்பிட்றான் அப்படி இப்படிங்கறீங்க.”

“ஏய்... என்ன நீ. நீ கேக்கற கேள்வியை நான் கேட்டுக்கலைங்கறது உன் அபிப்ராயமா? ஃபூல் க்ரிட்டிசைஸ் பண்றதை விட்டுட்டு சொல்றது செய் செய்யலைன்னா நாளைக்கு ஆபீசுக்கு வராதே... டொடக்...”

எடிட்டர் கிருஷ்ணா போனை வைத்து விட கோகுல் உதடு ச்சை! என்றபடி சலிப்போடு பக்கத்து மோடாவில் சாய்கிறான்.

"நல்ல தொழில்ப்பா..." - காதோரத்து வியர்வையோடு மனபாரமும் சேர்ந்து கொள்கிறது. இதுவரை தேசாந்திரம் போய்விட்டிருந்த மின்சாரம் திரும்பி எட்டிப் பார்த்ததில் மின்விசிறிகள் சிக்கிச் சுழல ஆரம்பிக்கின்றன.

அற்புதமான உறக்கம் ஆக்கிரமிக் கட்டுமா கோகுல் என்று கேட்டுக் கொண்டே ஆக்கிரமித்துவிட்டது.

'அப்புறம்தான் அந்த அற்புதம் நடந்தது.

கதவைத் தட்டுகிறது ஒரு கை.

தூக்கம் கலைந்து எழுந்து சென்று பார்த்தால் ஒரு கிழட்டு மனிதர். இடுப்பில் தொடையை மீறாத ஒரு குட்டித் துண் டோடு ஸ்கெலிட்டனான ஒரு எலும்புக் கூட்டின் மேல் தோலைச் சுற்றி அனுப்பின மாதிரி வந்து நின்று கொண்டு சிரிக்கிறார்.

"யார் நீங்க?"

"நான் யாரா? வரச் சொல்லிட்டு இது என்ன கேள்வி?"

"நான் வரச் சொன்னேனா புரியலியே."

"அது எப்படி புரியும். எப்பவும் புரிய வேண்டியது புரியாது. புரியத் தேவை யில்லாதது எல்லாம் புரியும். இது உன்

தப்புல்ல கலி புருஷன் வாங்கின சாபம் அப்படி...”

“ஹலோ... என்ன இது பேத்தல். யாருன்னு கேக்கறேன். சொல்லாம கலி புருஷன், கத்தரிக்காய்னுகிட்டு...”

“சரி, சரி! கோவிச்சுக்காதே கோகுல், தயக்கமே இல்லாம குற்றாலத்துக்கு வா. நான் யாருன்னு தெரிஞ்சுப்பே...”

“ஏன் இங்க இப்ப சொல்ல மாட்டீங்களோ...?”

“அதான் குற்றாலத்துக்கு வரச் சொல்லிட்டேன்ல...” அடுத்த நொடி அந்த மனிதர் தெலுங்கு சினிமா மந்திர வாதி போல காணாமல் போகிறார்.

‘ஹக்!’

கோகுலுக்கு நெஞ்சையடைக்கிறது. கண்ணைக் கசக்கி மண்டையை உசுப்பி, கிள்ளிவிட்டுக் கொண்டு கண்டது கனவா, இல்லை நனவா என்றறிய முயன்றபோது பொத்தென்று மோடாவில் இருந்து விழுந்து கனவுதான் என்று அறிந்து கொள்கிறான்.

எடிட்டர் கிருஷ்ணாவிடம் சற்றுமுன் பேசியதும் அந்த கிழத்தை என் கனவில் வரச் சொல்லுங்களேன் என்று சொன்னதும் நினைவில் நச்சென்று ஒரு கொத்து கொத்துகிறது.

வித்தியாசமான அனுபவம்.

இதுவரை வாய்த்திராத அனுபவம்.

சிலிர்த்துப் போகிறது மனதும் - உடம்பும்.

எல்லாவற்றுக்குமே சாட்சியை - நிரூபணத்தை நிதர்சனத்தை தேடும் புத்திக்கு வாய்த்தே விட்டது அந்த அனுபவம்.

அடுத்த நொடி தூக்கம் கலக்கம் எல்லாம் ஓட்டம் எடுக்கிறது. கிருஷ்ணாவை கூட போனில் திரும்பப் பிடித்து "சார் வெரி சாரி சார்... அந்த மனுஷர் என் கனவுலையும் வந்துட்டாரு. ஐ ஆம் கோயிங்'' என்று ஒரு ஜோல்னாவோடு குற்றாலத்துக்கு பறக்க ஆரம்பித்தவன் தான்...



## 4

"**யா**ரைத் தம்பி இங்க தேடறே...?" - பார்க்க கண்ணியமாக தெரியும் ஒரு புணூல் தரித்த பிராமணர் நடு வழியில் கோகுலைப் பார்த்து அக்னியாக கேட்கிறார்.

"அது வந்து..."

"நல்லச்சாமியையா?"

"நல்லசாமியா...?"

"அதாம்ப்பா... ஒத்த நாடி கோமாண சன்யாசி."

"உங்களுக்கெப்படி...?"

"என்னை ஒருத்தன் தேடி அலையறான். பிடிச்சு இழுத்துண்டு வான்னு அவர்தானே அனுப்பி வைச்சாரு!"

"என்ன சார் அதிசயம் இது. எங்க சார் அவர். மனுஷன் பெரிய விட்டலாச்சாரியாரா இருப்பார் போல இருக்கே..."

"ஏன் ஸ்பில் பெர்க்குன்னு' சொல்லத் தோணலையா?"

சொடக்கென்று மடக்கியதில் பிராமணர் கொஞ்சம் உலகம் தெரிந்தவர் என்கிற பிரமிப்பு தட்டுகிறது.

"சரி சரி வா... போய்...பார்ப்போம்" பிராமணர் வேகமாக முன் நடக்கிறார். நடையா அது? ஓட்டம்! கோகுலுக்கு இளைக்கிறது. அவர் திரிகூட மலையின் அடர்த்தியான ஒரு வனப்பகுதிக்கு நுழைந்து செல்கிறார்.

செடி கொடிகளிடம் எல்லாம் வாட்டம், பூசின மாதிரி ஒரு சில்லிப்பு மற்றபடி காடே கருகத் தொடங்கிவிட்ட ஆரம்பம் பயமுறுத்துகிறது.

பல இடங்களில் மொட்டை மரங்கள். தரைவரை அறுத்துக் கொண்டு போய் விட்டிருக்கிறார்கள்.

"உம் வா... வாலிபப் பையனா இருந்துகிட்டு இப்படி மெள்ள நடந்தா எப்படி?" பிராமணர் கிண்டல் செய்கிறாரா? கோகுல் முறைக்கிறான்.

"முறைக்காதே தம்பி... காட்டை கவனிச்சுக்கிட்டே வா. காற்று புக

இடமில்லாதபடி பொசு பொசுன்னு இருந்த காடு.

இப்ப இப்படி ஆகிப்போச்சு. அதான் மழையும் போச்சு..."

"ஃபாரெஸ்ட் டிபார்ட்மெண்ட் என்ன பண்ணிகிட்டிருக்கு?"

"வழக்கம்போல சமாதானம் சொல்லி கிட்டிருக்கு. ஆள்பலம் இல்லை. எம்.எல்.ஏ. எம்.பிங்க குறுக்கிட்றாங்க. 'முடிஞ்ச வரை காப்பாத்தறோம்'னு' அதே பல்லவிதான்."

"சரி இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?"

"மஞ்சள் அருவிகிட்ட போகணும்."

"அந்த சாமி, கீழே கோயில் மண்டபத்துல இருக்கறதால்ல சொல்லி யிருந்தாரு."

"ஆமாம்... நேத்துவரை நல்லசாமி அங்கதான் படுத்துக் கிடந்துச்சு. இன்னியில இருந்து மஞ்சள் அருவி பக்கத்துல உள்ள குகைதான் இனி அதோட இருப்பிடம்."

"சாப்பாடெல்லாம்?"

"நாலு சஞ்சீவி இலை... பத்து பிராணாயாமம், இரண்டு கைப்பிடி ஊத்துத்தண்ணி. அவ்ளோதான்."

"எந்த மூலைக்கு அதெல்லாம்...?"

"எந்த மூலைக்கா... ஒரு வாரத்துக்கு தம்பி அது."

"நம்ப முடியலை."

"உன்னை நம்பச் சொல்லலையே..."

"இப்படிச் சொன்னா எப்படி?"

"வேற எப்படிச் சொல்லணும்கறே..."

"அது எப்படி சாத்யம்கறீங்க?"

"நீ வேணா சாப்பிட்டுப் பாத்து தெரிஞ்சிக்கோ..."

"சரி... எதுக்கு சாமி வரச் சொல்லிச்சு. உங்களுக்கு தெரியுமா?"

"நேர்ல பாத்து தெரிஞ்சுக்கோயேன். நானும் உன் மாதிரிதான்."

பிராமணர் விளக்கமளித்தபடி முன் நடக்கிறார்.

வகிடெடுத்த மாதிரி பாதை. நடக்கும் போதே காதில் லேசாய் ஒரு இரைச்சல்.

"இங்க ஒரு பள்ளம் இருக்கு. மலைக் காற்று அங்கே மோதும்போது இப்படி சப்தம் கேட்கும்."

"ஐ, சீ..."

"அதோ... மஞ்சள் அருவி! முன்னல்லாம் இந்தப் பக்கம் இப்படி நடந்துவர முடியாது. குரங்குகளோட தொல்லையும் கரடி நடமாட்டமும் நிறைய இருக்கும். அதோட நினைச்சா பெய்யற மழையும் சாரலும் நடக்கவே விடாது.

இப்ப பாத்தியா காய்ஞ்சு கிடக்கிறது...?"

இருவரும் பேசியபடி நடந்து வருவதை அந்த நல்லசாமியும் ஒரு பாறை மேல் நின்று பார்ப்பது நன்றாகவே தெரிகிறது.

"அதோ சாமி... நமக்காக நின்னு கிட்டிருக்கு" கை காட்டுகிறார் பிராமணர். கோகுல் நிமிர்ந்து பார்க்கிறான். கனவில் தெரிந்த அதே முகம். அதே தோரணை. ஆச்சரியம் தோளில் அமர்ந்து காதைத் திருகுகிற மாதிரி பிரமை கட்டுகிறது.

நல்லசாமி சிரித்துக் கொண்டே வரவேற்கிறது.

நெருங்கிய நிலையில் "வா தம்பி..." என்கிறது. கோகுல் இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருக்கிறான்.

"வா... வந்து இப்படி உட்கார்..." நல்லசாமி எதிரே ஒரு திண்டுப் பாறையை காட்டி உட்காரச் சொல்ல உட்காருகிறான்.

மேலே கவிழ்ந்து கிடக்கும் காட்டு மரக்கிளைகள். அடிக்கும் வெய்யிலுக்கு மிகமிக இதமாக இருக்கிறது நிழல்.

"என்ன சாப்பிட்றே?"

கோகுல் அந்த கேள்வி முன் சிரிக்கிறான்.

"இந்த காட்டுக்குள்ள போய் இப்படி கேக்கறானேன்னு பாக்கறியா? தேனும் தினைமாவும் இப்பதான் ஒரு காட்டுவாசி கொண்டு வந்து கொடுத்துட்டு போனான். அது இருக்கு சாப்பிட்றியா?"

லேசாக சிலிர்க்கிறான் கோகுல்.

"பரவால்ல... இருக்கட்டும் உங்க சந்திப்பு, அந்த கனவு எல்லாமே பெரிய புதிரா இருக்கு. எனக்கு இதெல்லாம் புது அனுபவம்."

"ஆனா... பல கோடி யுகங்களை கடந்துட்ட இந்த பூமிக்கு அது ரொம்ப சாதாரண அனுபவம்தான் தம்பி."

"சரி எதுக்கு வரச்சொன்னீங்க?"

"சொல்றேன். எழுதிக்கோ."

"அதுக்கு முந்தி சில கேள்விகள்."

"கேளு."

"நீங்க?"

"ஒரு சாதாரண மனுஷன்."

"பேரு..."

"என்ன சாப்பு... சொல்லலையா?"

"சொன்னேன் சாமி. நல்லச்சாமின்னு."

"யாரும் கெட்டசாமின்னு சொல்லிடக் கூடாதுன்னு முந்திகிட்டு இந்த பேரை வெச்சுகிட்டீங்களா?"

"நீ வேணும்னா கெட்டசாமின்னே சொல். அதுவா இப்ப முக்கியம்?"

"வேற எது முக்கியம்?"

"இந்த மலை... இதோட மரம் செடி கொடிகள். மழை..."

"அதுக்கு என்ன பண்ணணும்?"

"சிலரைக் கொலை செய்யணும்."

கோகுல் திடுக்கிட்டு திக்குமுக்காடல் கொள்கிறான்.



## 5

"கொலையா?"

"ஆமாம் தம்பி. கொலை செய்யணும். சில அசுரர்கள் பிறந்திருக்காங்க. மரம் வெட்டி இயற்கையோட யுத்தம் நடக்கற துக்குன்னே பிறந்திருக்காங்க. அவங்கள கொல்லணும். இல்லேன்னா, இந்த பூமியை யாராலையும் காப்பாத்த முடியாது..."

"கொல்றதுதான் தீர்வா.. கைது, செய்யலாமே?"

"இப்ப அதைத்தானே செய்திருக் காங்க. இருந்தும் பலனில்லையே. ஜெயில்ல பாதுகாப்பா உக்காந்துகிட்டு ஆட்களை ஏவி விட்டுகிட்டு அதை செய்துகிட்டிருக்காங்க. ஆகையால் கொல்றதுதான் ஒரே வழி..."

கோகுல் பதில் பேச முடியாமல் விக்கித்துப் போய் அவரைப் பார்க்கிறான்.

'இவர் என்ன பிச்சைக்கார சன் யாசியா? இல்லை நக்சலைட்டா...?'

'நான் நச்சலைட்டா இல்லை பிச்சைக் கார சன்யாசியான்னு உனக்கு சந்தேகம் வந்திடிச்சு. அப்படித்தானே?"

கோகுலின் மனதை பிழையின்றி அவர் பார்த்ததில் அவன் திணறல் கூடுகிறது.

"தம்பி... சொல்றத எழுதிக்கோ... வரும் பௌர்ணமிக்கு இன்னும் இரண்டு நாள்தான் இருக்கு... அன்னிக்கு முதல் அரக்கன் சாவான். லட்சம் மரங்களை வெட்டினவன் அவன். அவனை நான் தொடாம கொல்லப் போறேன். இதை நீ உன் பத்திரிகைல எழுதணும்."

கோகுல் அவர் பேசுவதைக் கேட்டு பதில் சொல்ல இயலாதபடிக்கு வெறிக் கிறான்.

"எழுதிக்கோப்பா..."

"இதை சொல்லத்தான் கூப்பிட்டீங் களா?"

"நிறைய சொல்லப் போறேன். இப்ப இவ்வளவுதான்."

"ஆமா யார் அந்த முதல் அரக்கன்...?"

"அவன் செத்த பிறகு தானா தெரியவரும்..."

"செத்த பிறகு எழுதறேனே...?"

"நீ எழுதினாத்தான் தம்பி அவன் சாவான்..."

"இப்படி புதிரா பேசினா எப்படி... உங்ககிட்ட நான் நிறைய கேள்வி கேட்க வேண்டியிருக்கு."

"கேளு... நான் வேண்டாங்கலை. ஆனா எழுதாம மட்டும் இருந்துடாதே..."

"ஐயா... ஒருத்தரை ஒருத்தர் கொலை செய்யறேன்னு சொல்றதும்... அதைக் கேட்டு பத்திரிகைல எழுதறதும் தர்மம் கிடையாது. இதெல்லாம் சட்டப்படி குற்றமான விஷயங்கள்."

"வைரத்தை வைரத்தாலதான் அறுக்க முடியும் தம்பி. ஒரு குற்றத்தை இன்னொரு குற்றம் மூலமாதான் ஒடுக்க முடியும்."

"இது சினிமா டயலாக். உங்க கருத்தை நான் தப்புன்னு சொல்லலை. அதேசமயம் சரின்னும் சொல்ல முடியலை."

நல்லச்சாமி சிரிக்கிறது.

"நீ எப்படி வேணா சொல்லிக்கோ. ஆனா எழுது..."

"எழுதலேன்னா என்ன செய்வீங்க...?"

"எழுத வைப்பேன்."

"வேண்டாம் பெரியவரே. பத்திரிகை யாளனை மிரட்டி எல்லாம் பணிய வைக்க முடியாது..."

"அப்படியா? மிரட்டாமலேயே பணிய வைக்கிறேன். நீ கிளம்பு."

சட்டென்று அந்த பேச்சு முடிவுக்கு வந்ததில் கோகுல் முகத்தில் வருத்தம் பரவுவது நன்றாக தெரிகிறது.

ஆனாலும் திறமையான பத்திரிகை யாளன் நீரால் கரைக்க முடியாததை ஆசிட்டால் கரைக்க முடியுமா என்றுதான் பார்ப்பான்.

கோகுலும் பார்க்கிறான்.

“சரிங்க பெரியவரே... நீங்க சொன்ன படியே போட்டுட்றேன். அது எப்படி தொடாம கொல்வீங்க? என் கேள்விக்கு பதில் சொல்லுங்க.”

நல்லச்சாமியும் அவன் பல்டி அடிப்பதை புரிந்து கொண்டு சிரிக்கிறது.

“முதல்ல போடு... பிறகு பேசுவோம்” தீர்மானமாக சொல்லிவிட்டு எழுந்து கொள்கிறது.

“கட்டாயம் போட்றேன். உக்காருங்க. ஆமா நீங்க எப்படி என் கனவுல எல்லாம் வந்தீங்க. உங்களுக்கு மாஜிக்லாம் தெரியுமா என்ன?”

அவன் பேசப்பேச பதிலே சொல்லாமல் நடக்கிறது.

கொஞ்ச தூரம் சென்று திரும்பிப் பார்த்தபடி சொல்கிறது.

“தம்பி... போகும்போது, பஸ்ல போகாதே. வேற எதுல வேணும்னா போ...”

இது என்ன எச்சரிக்கையா இல்லை அவரின் ஆசையா?



# 6

கோமதி விலாசுக்குள் நுழைந்த போது...? கவலையோடு நிமிர்கிறார் கடை முதலாளி.

"என்ன வேணும்... நெய் தோசை சொல்லவா எங்க கடை ஸ்பெஷல் ஐட்டம்..."

"உம்..." என்கிறான் கோகுல். பசி தாவாக்கட்டையை பிராண்டிக் கொண் டிருக்கிறது. மனசில் நல்லச்சாமி சொன்ன விஷயம்.

"சீசன்னு நினைச்சு கிளம்பி வந்தீங் களோ?" முதலாளி நைச்சியமாக பேச ஆரம்பிக்கிறார். உள்ளே தோசை உருவாகும் சொய்ய்ய்ஸ் சப்தம்.

ஆமோதிப்பாய் அவரை பார்க்கிறான்.

"பாவம் நீங்க... இந்த தடவை சீஸன் எல்லாரையும் ஏமாத்திடிச்சு. மழை வராம இப்படியா கழுத்தறுக்கும்...?"

"ஆமா... இப்படி இதுக்கு முந்தி ஆகியிருக்கா?" கோகுல் ஜோல்னாவை பக்கம் வைத்தபடி கேட்கிறான்.

"இல்ல தம்பி.... இந்த மாதிரி எப்பவுமே காஞ்சதில்லை. குற்றாலநாதருக்கு என்ன கோபமோ, ஆனா ஒண்ணு தம்பி பொதுவாவே ஒரு பத்து பதினைஞ்சு வருஷமா குற்றாலம் குற்றாலமாவே இல்லை.

சண்டாளங்க மரங்களை வெட்டி, வெட்டி ஒரு வழி பண்ணிட்டாங்க..."

அவர் கருத்து கோகுலின் கண்களில் குத்துகிறது.

"ரொம்ப திருட்டோ?"

“திருட்டோவா... லாரி லாரியா... அந்த மரத்துக்கெல்லாம் வாய் இருந்தா மலை பூராவும் ஒப்பாரி சப்தம்தான் கேட்கும் தம்பி.”

“ஆமா யார் செய்யறது...?”

“ஒருத்தரா இரண்டு பேரா... ஒரு கூட்டமேல்ல செய்யுது.”

“இப்படி சொன்னா எப்படி?”

“எல்லாம் அஞ்சய்யா சிரோமணி குரூப்தான்.”

“அஞ்சய்யாவா... யார் அவரு?”

“இப்படி கேட்டா என்னத்த சொல்ல... அஞ்சய்யா இந்த ஊர் பிரபல புள்ளி. பெரிய தலைவன் காசு சேக்கறதெல்லாம் இப்படி மரம் வெட்டி கடத்தி... போலீசும் உடந்தை. நாய்க்கு எலும்பு உண்டு. அவங்களுக்கு கமிஷன் முடிஞ்சது.”

“ஆமா ஊர்ல யாரும் எதிர்ப்பு தெரிவிக்கிறதில்லையா, இவ்வளவு தெரிஞ்சிருக்கு... கையும் களவுமா பிடிச்சு நிமித்த வேண்டியதுதானே?”

“எதை... யாரை? பின்னால அவன் எங்களை நிமித்திப்பிடுவான். எண்பது கொலை வரை செய்தவன் அவன்...”

முதலாளி கிண்டலிக்க தோசை நடுவில் நுழைய ருசிக்க ஆரம்பிக்கிறான். கூடவே ஒரு மாபெரும் மரம் வெட்டியின் பெயர் தெரிந்த மகிழ்ச்சி முகத்தில்... நடுவில் கடைக்குள் ஒரு முரட்டு மனிதன் நுழைகிறான்.

அவனைப் பார்க்கவும் அவர் முகமும் பேச்சும் மாறிப் போகிறது. "இவன் அந்த அஞ்சய்யா ஆள்..." என்று கோகுல் காதை கடித்துவிட்டு "வா ராயா... என்ன சாப்பிட்றே? யப்பா ஒரு ஸ்பெஷல் நெய் ரவா போடு..." என்று ஒரு அந்தர் பல்டி அடிக்கிறார்.

கோகுல் புரிந்து கொண்டு சாப்பிட்டு முடித்து கல்லாவில் காசு வைக்கும்போது கேட்கிறான்.

"சென்னைக்கு பஸ் எப்போ தெரியுமா?"

"இதோ இப்ப இருக்கே... ஓடுங்க! விட்டா இனி ராத்திரி ஒன்பதுக்குதான்..."

"ட்ரெய்ன்...?"

"அதுக்கு திருநெல்வேலி போகணும். தாவு தீர்ந்துடும் பஸ்தான் சரி..."

வேறு வழியில்லை. பஸ்ஸில்தான் கிளம்பணும். முடிவுக்கு வரவும் பஸ்ஸில் போகாதே என்ற நல்லச்சாமி சொன்னதும் நினைவில் கொத்துகிறது.

தீர்மானிக்கிறது பத்திரிகையாள புத்தி, 'போய்த்தான் பார்ப்போமே என்ன நடக்கிறது என்று!'

பஸ் உருமிக் கொண்டு கிளம்புகிறது. அத்தனை கூட்டமில்லை. ஜன்னலோரக் காற்றில் வெப்பக் கலவை. முகத்தில் அறைவதில் கண் எரிகிறது. கூடவே பஸ்ஸிடம் நாட்டியக் குதி. சீட்டுகளிடமும் எலித்தனமாக மறை கழன்ற சப்தம்!

பதினைந்து மணி நேரம் இந்த கொடுமையை அனுபவித்தபடி செல்ல வேண்டுமா?

கேள்வியே கதி கலங்குகிறது.

எதாவது புத்தகம் எடுத்து இந்தக் கொடுமைகளை மறக்கலாம் என்று முயற்சிக்கிறான்.

குலுக்கலில் முடியாமல் போகிறது. கண்ணின் மணிகள் கதறுகின்றன. போகிறது என்று மடித்து வைத்து பின்னால் சாய்ந்தபோதுதான் அந்தச் சப்தம் கேட்டது...

“டமார்!” அவன் அமர்ந்திருக்கும் சீட்டின் பின்னால் நிற்கிற மாதிரி ஒரு புகைக்கோளம். கண்ணிலும் மூக்கிலும் ஜிவு ஜிவு என்று அது புகுவதில் வெடித்தது ஒரு ஆர்டி எக்ஸ் வகை வெடிகுண்டு என்பது உறைக்கிறது.

பஸ்சும் பக்கவாட்டில் சரிந்து இறங்கி ஒரு புளிய மரம் மீது முட்டி மோதி நிற்க டிரைவரும் கண்டக்டரும் இறங்கி ஓடத் தொடங்குகின்றனர்.

கோகுலும்...

தட்டுத் தடுமாறி ஜன்னல் வழியாக வெளியே ஒரு மூட்டை போல விழுந்து நூறு மீட்டருக்கு குறையாமல் ஓடித் திரும்பிய போது பஸ்ஸின் கொஞ்ச பாகமும் வெடிக்கிறது.

இனக்கலவரத்தின் எதிரொலி.

இறைவா... நல்லவேளை தப்பித்தேன். இப்படி நடக்கப் போகிறது என்று தெரிந்ததனால்தான் நல்லச்சாமி பஸ்ஸில் போகாதே என்று சொன்னதோ?

நிற்கும் இடத்தில் உச்சிப்பாதம் கிளர்ந்தெழுந்து சிலிர்க்கிறது.



## 7

கோகுலைப் பார்க்கவும் இருக்கையில் இருந்து எழுந்து கொள்கிறார் ஆசிரியர் கிருஷ்ணா.

"வாய்யா... போன காரியம் பழம் தானே? பார்த்தியா அந்த ஓல்டுமேனை... என்ன சொன்னார். எனிதிங் த்ரில்டு நியூஸ்..."

கேள்விச் செங்கலை அடுக்குகிறார். கோகுலும் விவரிக்கிறான். முடிக்கிறான்.

கிருஷ்ணா முகத்தில் வியப்பு + அதிர்ச்சிக் கலவையான உணர்வுகள்.

"என்னய்யா இது... இதச் சொல்லவா அந்த மனுஷன் வரச் சொன்னான்..."

"ஆமாம் சார்... என்ன செய்யப் போறீங்க. 'நிருபருக்கு நேர்ந்த விசித்திர மான அனுபவம்னு' பப்ளிஷ் பண்ணவா இல்லை..."

"நோ... நோ... கட்டாயம் பண்ணனும். என்ன நடக்குதுன்னு பாக்கணும்."

"விபரீதமா எதாவது ஆயிட்டா..."

"ஆகும்னு நினைக்கறியா...?"

"எனக்கு அப்படித் தோணலை. இது ஒரு வகைல அசுரவதம்தான். நடந்துட்டா. ஓ.கே. நடக்கலைன்னா நம்மளை வாசகன் கிண்டல் பண்ணுவானே."

"வாஸ்தவம்தான். அப்போ நீயே முடிவு செய். நீ எந்த முடிவெடுத்தாலும் எனக்கு சம்மதம். ஆனா ஒண்ணு - நான் அந்த நபரை சந்திக்கப் போறேன். உன் கனவு - அதுல அவரது விஜயம் எல்லாமே நினைச்சு பார்க்க முடியாத அதிசயங்கள். இதை சும்மா விடக் கூடாது. உன்னை பஸ்ல போகாதேன்னு சொன்னதும் ஒரு ஆச்சரியம்தான்..."

கோகுல் தாடையை வருடியபடி யோசிக்கிறான். நல்லச்சாமி முகம் உள் நிமிறுகிறது.

'நீ செய்தியை போட்டாத்தான் அவன் சாவான்...' சொன்னது ஓடுகிறது. காய்ந்து போன மரம் செடி கொடி எல்லாம் ஒரு க்ஷணம் விசும்பி அழுது முடிக்கின்றன. ஓட்டல் கடைக்காரர் வரை சடைத்துக் கொள்வது மனதைக் கிள்ளுகிறது. பஸ் விஷயத்தில் உயிர் பிழைத்ததும் திரும்ப சிலிர்ப்பிக்கிறது.

'அடேய் மரம் வெட்டி நீ சாகத்தான் வேண்டும். எப்படி சாகப்போகிறாய் என்பதுதான் தெரியாது.'

"சார் பப்ளிஷ் பண்றோம்!"

# 8

பட்டு வேட்டி சட்டை - விரல் கொள்ளாத மோதிரம் - காளைத் தோல் கருஞ்செருப்பு - அஞ்சய்யாவை பார்க்க அச்சு அசல் சினிமா வில்லன் ஞாபகம் வருகிறது.

சியலோவின் உள்புறத்தில் இதமான ஏ.சி.க்கள் அமுதம் இதழை பார்த்தபடி இருக்கிறார்.

முன்புறம் அவரது ஏவுகணை சுடலை.

"செய்திய படிச்சதுல இருந்தே மனசு சரியில்லண்ணே. நம்ம ஆளுங்களை அனுப்பு அந்த பிச்சைக்காரப்பய யாருன்னு பார்த்து பிடிச்சு இழுத்துகிட்டு வாங்கடான்னு அனுப்பியிருக்கேன்."

- அஞ்சய்யா நிமிருகிறார்.

"கூவே... இத ஏண்டா எனக்குன்னு நினைச்சே?"

- கருவுகிறார்.

"நினைக்காம... இந்த ஏரியாவுலையா பெரிய்ய மரம் திருடி..."

- சொல்லி முடிக்கும்முன் அமுதம் இதழ் முகத்தில் மோத ஒரு குத்து விழுகிறது. கூடவே கூப்பாடு...

"விளக்கெண்ணெய்... பூனைய மடியில கட்டிகிட்டு நான் சகுனம் பார்க்க

கிளம்பியிருக்கேன்டா. விட்டா நீ வாக்கு மூலம் கொடுத்து அப்ரூவராயிடுவேன்னும் சொல்லு...''

"அப்பால என் உசிரு உடம்புல நிக்க வேணாமா..."

"வெண்ண... தெரியுதுல்ல! ஞானம் இருக்கான், சிரோமணி இருக்கான், அப்துல் இருக்கான்... இவனுங்க டெல்லி வரை செல்வாக்குள்ள பசங்க. நான் இவனுங்க முன்னே சுண்டெலிடா.

எங்கப்பன் குதிருக்குள்ள இல்லேங்கற மாதிரி இருக்கு. உன் முந்திரிகொட்டைத் தனம்."

"அப்ப லூஸ்ல விடச் சொல்றீங்களா?"

"அமுக்கி கிட்டு இரு. நான் பார்த்துக் கறேன்..."

சொல்லிக் கொண்டே சிகரெட்டை எடுத்து கருத்த உதடு பிளந்து செருகு கிறார்.

சிகார் லைட் நெருப்பை சிமிட்டி நீட்டுகிறான் சுடலை.

"இதுக்கு ஒண்ணும் குறைச்சலில்லை" - முணுமுணுப்போடு கீழே இறங்குகிறார்.

- உரசிக் கொண்டு நிற்கிறது இன்னொரு கார். மாருதி எக்ஸெல்.

- ஜன்னல் கண்ணாடி வேகமாய் கீழே இறங்க அதன் உள்ளே பந்தாவாய் ஒரு முகம் தெரிகிறது.

"வா சிரோமணி... இப்பதான் நினைச் சேன்..." - வரவேற்கிறார் அஞ்சய்யா.

"புத்தகம் படிச்சியா...?"

"படிச்சேன் படிச்சேன்... எவனோ உளறிக் கொட்டியிருக்கான். ஏன் உனக்கும் 'டர்ர்' ஆயிடிச்சா?"

"கிண்டலா அஞ்சய்யா... ஆமா அந்தக் கிழட்டுப் பய...?"

"யாருக்கு தெரியும்... பத்திரிகைக் காரனுங்களுக்கு புத்தகம் விக்க வேண்டாமா... ஏதாவது இப்படி கிளப்பி விட்டுகிட்டு இருப்பாங்க. இதை எல்லாம் கண்டுக்கலாமா என்ன...?"

"நானும் அதத்தான் நினைச்சேன்..."

"என்னத்த நினைச்சே... அப்படி நினைச்சிருந்தா என்னப் பார்க்க வருவியா என்ன?"

"திரும்ப கிண்டலா... ஆமா எப்படி இருக்கு பிசினசு."

"எங்க... புது பாரெஸ்டர் நான் காந்திக்கு நேர் வாரிசுங்கறான். வீரப்பன் போட்டுத் தள்ளப் போறான்னேன்."

- சிரிக்கிறார் அந்த பந்தா மனிதர்.

"இந்த கிழட்டுப் பயலுக்கு வீரப்பன் லாம் தெரியல பார்..." என்கிறார்.

"என்ன சிரோமணி... திரும்பத் திரும்ப அவன் பேச்ச பேசிகிட்டு, இது பத்திரிகைக் காரங்க பறக்க விட்ற பூச்சி."

"அப்ப எழுதுனவனை பட்ட கிளப்பணும்."

"அப்புறமா நம்ம ஜாதகத்தையே அலச ஆரம்பிச்சுடுவாங்க. கண்டுக்காம காரியத்த பாக்கணும்."

"அப்படிங்கறே..."

"இல்லியா பின்னே... ரொம்ப தான் ஆழம் பாக்கறே. போய் ஜோலியப்பாரு. நாம பாக்காத ஆளுங்களா என்ன?"

- சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒரு லாரி நிறைய பசும் கட்டைகள் தாண்டிச் செல்கின்றன.

"பாரெஸ்டர் படுத்தும்போதே சரக் கடிக்கிறியே. இல்லாட்டி மலையையே கடத்திடுவேன்னு சொல்லு..."

"ஆமா நீ ரொம்ப யோக்யம் பாரு. இதெல்லாம் தொழில் சாமர்த்தியம்யா..."

"நல்லாருந்தா சரி, அப்ப நான் கிளம்பறேன். எதுக்கும் எச்சரிக்கையா இருப்போம் என்ன சொல்றே?"

"அது ரத்தத்துல ஊறின விஷயம்யா" - அஞ்சய்யா கெக்கலிப்பாக சொல்ல சிரோமணியின் மாருதி திரும்பவும் சீறத் தொடங்குகிறது.



பௌர்ணமி

9

வானசந்திரன், ஒளிப் பாலைத் துப்பிக் கொண்டிருக்கிறான். மலை பங்களா வீட்டில் அஞ்சய்யா விஸ்கியை கண்ணாடி தம்ளரில் கவிழ்த்துக் கொண்டிருக்கிறார்.

அமர்ந்திருக்கும் அறை ஜன்னலுக்கு வெளியே மேற்குத் தொடர்ச்சி மலையின் நீண்ட வரிசை...

பார்த்துக் கொண்டே விஸ்கியை சூப்பும்போது தொலைபேசி அழைக்கிறது.

எடுத்து காதைக் கொடுக்கவும் பதட்டமாய் ஒரு குரல்.

"அஞ்சய்யாண்ணே இருக்காருங்களா?"

"அஞ்சய்யாதான பேசறேன். என்ன விசயம்...?"

"அண்ணே... புத்தகத்துல போட்ட மாதிரியே ஆயிடிச்சுண்ணே. நம்ம சிரோமணி செத்துட்டாரு..."

அடுத்த நொடி விஸ்கி ரிவர்ஸில் மேலேறி புரை தட்டி மீசை முகமெல்லாம் புரை வழிகிறது.

"எலேய்... யாருவே நீ... என்ன சொல்றே?"

"சிரோமணி செத்துட்டாருன்னு சொல்றேன். அது மட்டுமில்ல சிரோமணிய கொன்ன ஆள் இப்ப நேரா உங்க மலைபங்களா பக்கம்தான் வந்துகிட்டிருக்கான். ஜாக்கிரதை..."

"நீ யாரு...?"

"நா சிரோமணி ஆளு. ஒரு முக்கிய மான விசயம். அந்த கிழட்டுப்பய நாம நினைச்ச மாதிரி ஒண்ணும் பிச்சக்கார சன்னியாசிப்பய கிடையாது. சரியான மாயக்காரன். மோடி வேலை எல்லாம் தெரிஞ்சவனாட்டம் இருக்கான்."

"கண்ணை நல்லாவே கட்றான். ஒரு வினாடி அசந்தாலும் தொலைஞ்சீங்க. இங்க சிரோமணி அய்யாவ பாக்க உங்க வேஷத்துல வந்தான்னா பாத்துக்குங் களேன்..."

"நெசமாவா... நம்ப முடியலையே..."

"அப்புறம் உங்க தலை எழுத்து... டொடக்..." அங்கே தொலைபேசி முடங்க இங்கே அஞ்சய்யா முகம் வியர்வைக் கூரை போட சரியாக இருந்தது.

விஸ்கி போதையை மீறி விறுவிறு என்று ஆகிறது. இடுப்பைத் தொட்டுப் பார்க்கின்றன கைகள். நல்ல வேளை இருக்கிறது பிஸ்டல்.

தெம்போடும் ஒருவகை எச்சரிக்கை யோடும் திரும்பவும் தொலைபேசியைத் தொடுகிறார்.

வந்த தகவலை ஊர்ஜிதம் செய்து கொள்ள சிரோமணி வீட்டுக்கே போன் செய்ய ஆயத்தமாகிறார்.

சட்டென்று எண்கள் நினைவுக்கு வர மறுக்கிறது.

சுடலை இருந்தால் சுழற்றிப் பிடித்துக் கொடுப்பான்.

அவனையும் ஒரு பெட்டைக் குட்டி பிடித்து வர வெளியே அனுப்பியாயிற்று.

தடுமாறுகிறது கைகள். கண்ட எண்கள் சுழல்படுகிறது.

கச்சிதமாக யாரோ கதவைத் தட்டும் சப்தமும் சேர்ந்து கொள்கிறது.

யாராக இருக்கும்...?

"யாரது?"

"நான்தான் அஞ்சய்யா சிரோமணி..."

அடுத்த நொடி தொண்டையில் கார்க் அடைத்த மாதிரி ஒரு ஹக்.

"சிரோமணியா... செத்தப் பயலா?"

"அட என்ன அஞ்சய்யா... கதவைத் திற..." - பயத்துடன் மிரள ஆரம்பிக்கிறார் அஞ்சய்யா.

நொடிகள் நிமிடங்களை தொடுகிறது.

"என்ன பண்றே... நான் கேள்விப் பட்டது சரிதான். ஏய் கதவைத்திற..."

'என்ன இவன் கேள்விப்பட்டது... அது இது என்கின்றானே...?'

"என்னத்தடா கேள்விப்பட்டே.... கிழட்டுப் பயலே."

"கதவைத்திற சொல்றேன்..."

"மாட்டேன். திரும்பிப்போ! என்னை என்ன ஈனா வானான்னு நினைச்சியா..."

"நான் ஈனாவானா இல்ல - நீதான்!"

- கதவுக்கு இந்த பக்கமும் அந்த பக்கமும் வாக்குவாதம் முற்ற அஞ்சய்யா பிஸ்டலை கையில் எடுத்துக் கொண்டு கதவை நெருங்கி திறக்க ஆயத்தமாகிறார்.

அப்படியே நெஞ்சுக்கு நேரே நீட்டி ஒரே போடு போட்டுவிட வேண்டியதுதான்.

கடக்...

கதவு திறக்கப்பட அப்பால் முறைப் புடன் சிரோமணி அவர் நெஞ்சுக்கு நேரே குரூர புன்னகையுடன் அஞ் சய்யாவின் துப்பாக்கி நிமிறுகிறது.

"அஞ்சய்யா என்ன இது... போன் பண்ணி வரச் சொல்லிட்டு துப்பாக்கிய நீட்றே - என்னை என்ன எவனாவது போலீஸ்காரன்னு நினைச்சியா? நானும் வெச்சிருக்கேன் துப்பாக்கி..."

- சிரோமணி இடுப்பில் கையை விட்டு துப்பாக்கியை எடுக்க முனையும் முன் அஞ்சய்யாவின் துப்பாக்கிக் குண்டைத் துப்புகிறது, நட்ட நடு நெஞ்சு துவாரம் விழுந்து ரத்தம் பீறல் கொள்கிறது.

"எலே மாயக்காரா... என்னை என்னனு நினைச்சே" - அஞ்சய்யா துப்பாக்கி புகையை ஊதிக் கலைத்தபடி செருமுகிறார்.

"அண்ணே என்னண்ணே சப்தம்?" - சுடலை ஓடி வருகிறான். கூடவே ஒரு இருபது வயது சுடிதார்.

- அந்த நாயை இழுத்து எறி... பொறவு சொல்றேன்.

- சுடலை குனிந்து பார்க்கிறான். சிரோமணி.

- ஐயோ என்னண்ணே இப்படி பண்ணிபிட்டீங்க. சிரோமணி ஐயா உங்க சிநேகிதராச்சே...

"போடா பிச்சைக்கார பயலே... இவன் சிரோன்மணி இல்லடா. மாயக்காரன்..."

"மண்ணாங்கட்டி... உங்களுக்கு என்ன ஆச்சு. இது சிரோமணிதான்."

"என்னடா சொல்றே?" - சுடலை கேள்விக்கு பதில் சொல்லாமல் குனிந்து சிரோமணியை பார்க்கிறான்.

- உயிர் மூச்சு டாடா காட்டி விட்டிருக்கிறது.

"அய்யோ உசுர் போயிருச்சே... என்னண்ணே இப்படி பண்ணிட்டீங்க. காலைல கூட நல்லா பேசிகிட்டிருந் தீங்களே..."

- சுடலை புலம்பப் புலம்பத்தான் அஞ்சய்யாவுக்கு தான் தவறு செய்து விட்டது புரிய ஆரம்பிக்கிறது.

"சுடலை... நிச்மாவா? இது சிரோ மணியா?"

"என்னண்ணே... கண்ணா தெரியல..."

- சுடலையின் கேள்வியைத் தொடர்ந்து அந்த சுடிதார் அப்படியே நழுவி ஓட ஆரம்பிக்கிறது.

- அஞ்சய்யா மெல்ல நிதானத்துக்கு வருகிறார். தன் கையைக் கொண்டே தன் கண்ணைக் குத்திக் கொண்டது மெல்ல உறைக்க ஆரம்பிக்கிறது.

"சுடலை... எல்லாம் டெலிபோன் பண்ண வேலடா..."

"டெலிபோனா?" - ஆமோதிக்கிறது டெலிபோன். திரும்ப சிணுங்கலான அழைப்பு. சுடலை போய் எடுக்கிறான். இப்பொழுது மிருதுவான குரல்.

"என்ன சிரோன்மணி போய்ச் சேர்ந்துட்டானா?"

"ஏய். யார் நீ...?"

"கொஞ்ச நேரத்துல போலீஸ் வரும். நீ யாருன்னு முதல்ல சொல்லு."

- சுடலையும் மருளுகிறான். ரிஸீவரை விடாமல் பிடித்தபடி அஞ்சய்யா பக்கம் திரும்பி "ஐயா... போலீஸ் கிலீஸ்ன்னு எவனோ பயம் காட்றான்."

"போலீஸா...?" அஞ்சய்யாவும் அரண்டு போகிறார். அஞ்சய்யா வரையில் போலீஸ் ஒண்ணும் பிரமாதமான விஷயம் கிடையாது. அது அவரின் இடுப்பில் அமர்ந்திருக்கும் குழந்தைமாதிரி... இது செத்து கிடக்கும் சிரோமணிக்கும் மிக பொருந்தும். இந்த நிலையில் இந்த போலீஸ் குழந்தை யார் பேச்சை கேட்கப் போகிறது. அஞ்சய்யாவுக்கே தடுமாற்ற மாகிறது. எதற்குமே தடுமாறதவர் தடுமாறத் தொடங்குகிறார்.

"ஏலேய் பாடியை முதல்ல தூக்கி வெளில எறிடா. பொறவு மற்றத பேசலாம்" - என்கிறார். சுடலை தலை ஆட்டுகிறான். குனிந்து பாடியைத் தொட்டு தூக்கப் போகும்போதுதான் அழைத்து வந்த சுடிதார் ஞாபகம் வருகிறது.

"ஐய்யா அண்ணா... கிராக்கி ஒருத்தியை பிடிச்சுகிட்டு வந்தேன். ஓடிட்டா போல - அவ போய் யார்கிட்டயாவது உளறுனா கிழிஞ்சிடும்ணே..."

"போடா... போய் முதல்ல அவளப்பிடி" - சுடலை தற்காலிகமாக சிரோமணியை விட்டுவிட்டு ஓட ஆரம்பிக்கிறான்.

இப்பொழுது அஞ்சய்யா மட்டும் தனியாக...

ச்சே! எத்தனை பெரிய தவறை செய்து விட்டோம்.

நொந்து கொள்கிறார்.

போன் செய்து மூட்டிவிட்டவன் எவனாக இருப்பான்?

கச்சிதமாக பயத்தை மூட்டி காரியத்தை முடித்து விட்டானே...

போதையால் சற்று பிறழ்ந்து போனதற்கு இப்படி ஒரு தண்டனையா?

வருத்தமும் புலம்பலும் மாநாட்டுக் கூட்டம்போல பெருகி வரும்போது திபுதிபு என்று சப்தம் கேட்கிறது. நிமிர்ந்தால் படையோடு சப்- இன்ஸ்பெக்டர்!

கூடவே பயந்த விழிகளுடன் சுடிதார் பெண்.



## 10

உற்சாகமாக ஓடி வருகிறான் கோகுல். அவனை விட அதிக உற்சாகத்தில் இருக்கிறார் ஆசிரியர் கிருஷ்ணா.

"தெரியும் கோகுல்... நானும் நியூஸ் பார்த்தேன். அந்தப் பெரியவர் சொன்ன மாதிரி சிரோமணிங்கற மரக்கடத்தல்காரன் கொலை செய்யப்பட்டிருக்கான். அதுல அஞ்சய்யாங்கற கடத்தல் பேர்வழி மாட்டியிருக்கான். அஞ்சய்யாதான் கொன்னாங்கறதுக்கு ஒரு பெண் வேற சாட்சியா இருக்கா. கேஸ் ரொம்ப வலுவாவும் இருக்கு. பெரியவர் சொன்னது போலவே ஆயிடிச்சு. நம்ம செய்தியால தான் இப்படி நடந்துச்சாங்கறது கொஞ்சம் நீ வெரிஃபை பண்ணனும். எனிவே அதனால் அழிவு ஏற்பட்டிருந்தாலும் சரி... இரண்டு சூப்பர் கிரிமினல்கள் விழுந்துட்டாங்க... அந்த வகைல எனக்கு ரொம்பவும் சந்தோஷம்."

- கோகுல் கண்சிமிட்டி ஆமோதிக்க கிருஷ்ணா தொடர்கிறார்.

"நான் அந்த பெரியவரை சந்திக் கறதுங்கற முடிவுல இருக்கேன் நீயும் வரே..."

●

போலீஸ் ஸ்டேஷன். உள் நுழைகிறான் கோகுல். அடையாள அட்டையை காட்டி பத்திரிகையாளன் என்பதை உணர்த்தின மறுநொடி மரியாதையோடு ஒரு நாற்காலி கிடைக்கிறது.

"சொல்லுங்க..." என்று சப்-இன்ஸ்பெக்டர் அவனை பார்க்கிறார்.

"மிஸ்டர் அஞ்சய்யாவை பார்க்க முடியுமா?"

"அது வந்து... அவர் யாரையும் பார்க்க விரும்பாத மாதிரி தெரியுது."

"எங்க பத்திரிகைப் பேரைச் சொல்லிப் பாருங்களேன்."

"அப்படி சொன்னா ரொம்ப கோபப் படுவார்னு நினைக்கிறேன். ஏன்னா... பத்திரிகைக்காரன் பண்ண கலாட்டால தான் நான் குற்றவாளியாயிட்டேன். சிரோமணியும் செத்துட்டான்னு அவர் ஸ்டேட்மெண்டே கொடுத்திருக்கார்."

"நாங்களா அவரை கொலை செய்யச் சொன்னோம். பெரிய மரம் கடத்திகள் கொலை செய்யப்படுவார்கள்னு எழுதினோம்..."

"ஆமா உங்களுக்கு தகவல் தந்த அந்த சன்னியாசி - ஜமீன் சன்யாசி போர்வைல உள்ள நக்சலைட் இருக்கிற இடம் தெரியுமா உங்களுக்கு..."

"சன்யாசி போர்வைல நக்சலைட்டா... அப்சல்யூட் சன்யாசி சார் அவர்."

"ஓ.கே... ஓ.கே... அவரை பார்க்கணும்."

"சாரி இன்ஸ்பெக்டர். போட்டுக் கொடுக்கறவன் நல்ல பத்திரிகையாளனா இருக்க் முடியாது. அப்படியே நான் போட்டுக் கொடுத்தாலும் உங்களுக்கு பலன் இருக்காது. அவர் நிஜமாலுமே ஒரு சூப்பர்மேன்..."

"சூப்பர்மேன் எதுக்கு உங்க மூலமா பத்திரிகைல செய்தி போட்டு டெலிபோன்ல பேசி குழப்பி மோதவிட்டு கொலை செய்யணும்?"

"அது அவர் சாமர்த்யம். இந்த புலிகளுக்கு எங்க போச்சு புத்தி...? ஓ.கே. சார் பேசுனா பேசிகிட்டே போகலாம். லெட் வில் மீட்...?"

"சாரி... அவர் இப்ப ஒரு விசாரணை கைதி. கோர்ட்ல புரொட்யூஸ் பண்ணி கேஸ் ஃபைல் பண்ண வேண்டியிருக்கு. உங்களோட பேச விட்டா நல்லா இருக்காதுன்னு நினைக்கறேன்."

"அப்ப நீங்க சொன்னத அப்படியே போட்டுட்றேன்..."

"எதையும் போட வேண்டாம் நீங்க."

"இதையும் சேர்த்துப் போடுவேன். போட்டாத்தான் நான் நாணயமான நல்ல பத்திரிகைக்காரன். ஐ ஆம் சாரி-வரட்டுமா?"

– கோகுல் கிளம்ப ஆயத்தமாக டைட்டாக ஒரு லுக் கொடுத்து தன்

கணிசமான கோபத்தை காட்டுகிறார் சப்-இன்ஸ்பெக்டர்.

●

அமுதம் இதழின் முதல் பக்கத்திலேயே நல்லசாமி பற்றிதான் செய்தியே... சொன்னது பலித்தது - அசுரவதம் ஆரம்பம் என்கிற ஹெட் லைனுடன்...

புத்தகத்தை ஒரு பார்வை பார்த்து விட்டு அப்ரூவல் தருகிறார் கிருஷ்ணா. பிரஸ் இன்சார்ஜ் நகருகிறான். கோகுல் உள்ளே நுழைகிறான்.

"சார் நான் ரெடி... கிளம்பலாமா?"

"உம்..." - எழுந்து கொள்கிறார் கிருஷ்ணா. அந்த நல்லசாமியை பார்க்க கிளம்பி விட்டார்கள். காத்திருக்கிறது கார். ஏறி பயணிக்கையில் ஸ்லாகிப்பு.

"என் கேரியர்ல எவ்வளவோ விஷயங் களை பாத்துருக்கேன். ஆனா இப்படி ஒரு விஷயம் ரொம்ப புதுசு. இயற்கையை காப்பாற்ற ஒரு தனி மனிதன் போராட தொடங்கி இருக்கறது ரொம்ப பெரிய விஷயமும் கூட..."

"வாஸ்தவம்தான் சார்... இந்த சன்யாசிகளால எதாவது பிரயோஜனம் உண்டா? லைஃப்ல இருந்து எஸ்கேப் ஆக நினைக்கிற சோம்பேறிகள் தானே இவர்கள்னு நினைச்சுகிட்டிருந்தேன். முதல் தடவையா நல்லசாமி அந்த அபிப்ராயத்தை மாத்தியிருக்கார்.

ஆரம்பத்துல கொலை செய்யப் போறேன்னு சொன்னப்போ என்னடா இது பைத்தியக்காரத்தனம்னு நினைச் சேன். ஆனா என்ன ஒரு க்ளவர் மூவ் பாருங்க."

"செத்துருக்கற சிரோமணி ஒரு ஒண்ணா நம்பர் கல்பிட். எந்த கட்சி ஆட்சிக்கு வருதோ அது அவன் கட்சி. சரியான நபர்தான் போய் சேர்ந்திருக்கான். தப்பிக்க முடியாதபடி அஞ்சய்யாவையும் உள்ள தள்ளிட்டான்.

இன்னும் எத்தனை எத்தனைத் தலைகள் இப்படி இருக்கோ..."

- கார் பறந்து கொண்டிருக்கிறது.

"சார்... நாம நல்லச்சாமிக்கு இனி முழு ஒத்துழைப்பு தரணும்."

"தப்பா சொல்றே கோகுல். அவர்தான் நமக்கு தரணும். அவர்கிட்ட நிறைய ஸ்பெஷல் பவர் இருக்கு. அதை பத்தியும் தெரிஞ்சுக்கணும்."

யோகிகள்ல பாபாவுக்கு நிறையவே சோஷியல் திங்கிங் இருக்கு. ஜன சேவையே மிகப் பெரிய சேவைங்கறது பாபாவோட கான்சப்ட். அடுத்து தனி மனித ஒழுக்கம். மற்ற சில யோகிகள் சும்மா சித்து வேலை காமிச்சு பக்தியை மட்டும் பரப்பறாங்க. சிலர் ஆன்மீகத் துக்கே அல்வா கொடுத்துட்டு காமப் பிசாசாவும் இருக்காங்க.

இந்த நல்லசாமி உண்மைல ஒரு ரைட் ஹியூமன்தான்...

- சிலாகிப்புகளும் - கருத்துமாய் பயணம் தொடரும் அதேசமயம்...

●

"**சா**மி... முதல் அம்பு நல்லாவே பாய்ஞ்சிடுச்ச... அடுத்து?" - மலைப் பாதை ஒன்றில் சஞ்சீவி இலை தேடும் நல்லசாமியிடம் கேட்டுக் கொண்டிருக் கிறார் சுப்பு என்கிற அந்த பிராமணர்.

"அந்த அம்புனால பாதிக்கப்பட்ட கூட்டம் இப்ப என்னை தேட ஆரம்பிச் சிருக்கு சுப்பு. கீழ நிறைய பேர் துப்பாக்கியும் கையுமா அலைய ஆரம்பிச்சிருக்காங்க. நீ கவலைப்படாதே. அவங்கள நான் பாத்துக்கறேன்."

- சுப்பு லேசாக மிரளுகிறார்.

"சாமி அவங்க உங்கள கண்டு பிடிச்சிட்டா...?"

"முதல்ல கண்டுபிடிக்கட்டும். பிறகு பாத்துக்கலாம். ஒரு முக்கிய விஷயம். அந்த பத்திரிகை ஆசிரியர் என்னை பார்க்க வந்துகிட்டுருக்கார். நேரா இங்க தான் வருவார். அவங்க இப்ப இங்க வரவேண்டாம். அவங்கள கீழ ஹோட்டல் தங்க வை."

"அவங்கள எங்க போய் எப்படி சந்திக்கிறதுன்னு..."

- நல்சாமி சிரிக்கிறது.

"சரியா ஒரு மணிக்கு காரை விட்டு இறங்கி குற்றாலநாதர் கோயிலுக்குள்ள நுழைய முயற்சி செய்வாங்க. அந்த பைய்யனதான் உனக்கு தெரியுமே. பார்த்து ஹோட்டலுக்கு கூட்டிகிட்டு போ..."

"எந்த ஹோட்டல்னும் சொல்லிட்டா நல்லது."

"கணேசனோட ஹோட்டலுக்கே கூட்டிக்கிட்டு போ, அவங்கள எந்த காரணத்தக் கொண்டும் இன்னிக்கு மட்டும் வெளிய வர வேண்டாம்னும் சொல்லு..."

"சரி சாமி..." மறு பேச்சு பேசாமல் அது வரை இடுப்பில் கட்டியிருந்த துண்டை எடுத்து தோளில் விரித்து போட்டுக் கொண்டு நடக்கிறார் அந்த பிராமணர்.

நல்லசாமி சிரித்துக் கொண்டே அந்த வனத்தின் அடர்த்தியான புதர் ஒன்றுக் குள் புகுந்து மறைந்தும் போகிறது!



## 11

ஒரு மணி.

சொல்லி வைத்த மாதிரி நீவிக் கொண்டு நிற்கிறது கார். வெம்மை சடுகுடு விளையாடிக் கொண்டிருக்கிறது. பெருமூச்சோடு கீழே இறங்கும்

கிருஷ்ணா கோகுல் எதிரில் பணிவாகப் போய் நிற்கிறார் சுப்பு.

"ஐயா நீங்களா... உங்களையும் பாக்கணும்னு நினைச்சேன்..." கோகுல் ஆச்சரியப்படுகிறான்.

"அதான் பாத்துட்டீங்களே... வாங்க - நீங்க வருவீங்க உங்களை ஹோட்டல்ல தங்க வைங்கன்னு சாமிதான் அனுப்பினாரு..."

சுப்பு சொல்வது கிருஷ்ணாவை புரட்டுகிறது.

"நாங்க வரப்போறது எப்படி அவருக்கு தெரியும்?"

கேட்க நினைத்து அவர் வரையில் இது அபத்தமான கேள்வி என்று முடிவிற்கும் வந்து அந்த க்ஷணம் கண்களை மூடி பரவசம் கொள்கிறார் கிருஷ்ணா.

"வாங்க..." - சுப்பு முன் நடக்க சூட்கேஸ் சகிதம் பின் நடக்கின்றனர் இருவரும்.

அழுக்கு லுங்கியும், துண்டு பீடியுமாய் நிற்கும் ஒருவன் கச்சிதமாக இதை பார்த்துவிட்டு அங்கிருந்து நகர ஆரம்பிக்கிறான்!

●

பெரிய அந்த மாமரத்தடியில் விதம் விதமான நாற்காலிகள். அதில் எல்லாம் சிவந்த கண்ணும், சிகரெட் கையுமாக தேகங்கள்.

"பத்திரிகைக்காரனுக்கும் அந்த சாமியார் பையனுக்கும் நிச்சயமா கனெக்ஷன் இருக்கு. அதான் அப்படி ஒரு விசயத்த போட்டு நம்மளை யெல்லாம் காபரா படுத்தி - நினைச்ச மாதிரியே அப்பாவை சாகவெச்சு, அஞ் சய்யாவையும் உள்ள தள்ளியிருக்காங்க.

விட்டா அடுத்தடுத்து நாமளும் மாட்டிக்குவோம். இதை இப்படியே விடக் கூடாது."

- கருவிக் கொண்டே சிகரெட் தலையின் சாம்பலைத் தட்டி விடுகிறான் சிரோ்மணி மகன் ஞானமணி.

"ஏலேய் நிறுத்துடா... பத்திரிகைக் காரன் சாமியார்னு உளறிகிட்டு... எவனோ ஒருத்தன் போன் பண்ணி சொன்னா எங்க போச்சு இந்த அஞ்சய்யாவுக்கு புத்தி. பதிலுக்கு போன் பண்ணி தான் கேள்விப்பட்டது உண்மையா பொய் யான்னு தெரிஞ்சுக்காம இந்த பய எதுக்கு அவசரப்பட்டு சுட்டான்...?" மலையில் சாராயம் காய்ச்சும் இருளப்பன் உரிமை மிகுதியோடு பதில் கேள்வி கேட்கிறான்.

"அது... ஏதோ போதைல நடந்துடிச்சு. இப்ப அதா பேச்சு. நாம இனி என்ன செய்யறதுன்னு பேசுவோம்."

"அந்த சாமியார்ப்பய யாருன்னு பாக்கச் சொல்லி அனுப்பியிருக்கேன். இன்னிக்குள்ள தெரிஞ்சாகணும்னும்

சொல்லியிருக்கேன். பொறுங்க நிச்சயம் தகவல் வந்துடும்.''

''தெரிஞ்சு என்ன பண்ணுவே... அவன் பொல்லாத் சாமியாரா இருந்தா என்ன பண்றதாம்?''

''வழி இருக்குடா. நான் சொல்றத நீ நல்லா கேளு. இதை எல்லாம் சாமி யாருங்க செய்ய மாட்டாங்க. சாமியாருங் களை கைக்குள்ள போட்டுகிட்டு வேற யாராவது தான் செய்யணும்.''

''யாராவதுன்னா... அந்த பத்திரிகைக் காரனா?''

''அவனாவும் இருக்கலாம். ஆனா என் வரைல நான் என்ன நினைக்க றேன்னா பத்திரிகைக்காரன்கூட இருக்க முடியாது. நம்ம தொழில்துறை எதிரிங்க தான் யாராவது தனிக்காட்டு ராஜாவா தான் மட்டுமே இருக்கணும்னு திட்டம் போட்டு இப்படி சாமியார் அப்படி இப்படின்னு ஏதாச்சும் பண்ணிகிட்டிருக் கணும்.''

''எப்படி இப்படி தீர்க்கமா சொல்றே?''

''சாமியார்னா மாய மந்திரம் பண் ணில்ல கொன்னுருப்பான். இப்படியா போன் பண்ணி பேசி ஒருத்தன் மேல ஒருத்தனுக்கு சந்தேகம் வந்து மோதிக்கும்படி பண்ணியிருப்பான்? சாமியாராம் சாமியார். எல்லாம் டாவ். யாரோ தொழில் முறை எதிரிதான் செய்திருக்கான். அதுக்கு பத்திரிகைக் காரன் உடந்தை.''

கூட்டம் ஆமோதிப்பாய் தலையசைக்கிறது. குறிப்பாக ஞானமென்னும் பெரிய தலை அதிகபடியாக ஆமோதிக்கிறது.

"கரெக்டா சொன்னே இருளப்பா... இது அந்த அப்துல் வேலையாதான் இருக்கணும். அவன் மருமகன் எம்.பி.யா இருக்கான்கற மப்புல இப்படி கூத்தடிக்கறான் அவன். இல்லாட்டி நமக்கு முந்தி இங்க அவன் வந்திருக்கணும்ல...?"

"நீ சொல்றதுதான் சரி ஞானம். அந்த அப்துல்தான் பத்திரிகைக்காரனை பிடிச்சுகிட்டு ஏதோ லொள்ளு பண்ணியிருக்கான், நாமல்லாம் இனி சுதாரிப்பா இல்லாட்டி கிழிஞ்சிடும் கிருஷ்ண கிரி."

சொல்ல வாய் மூடிய வேளையில் கோயில் வாசலில் கிளம்பிய அழுக்கு லுங்கி கச்சிதமாக அங்கு பிரவேசிக்கிறான்.

"என்னடா...?"

"யாரோ ரெண்டு பேர் கார்ல வந்து இறங்குனாங்க. அவங்கள ஒரு ஐயர் கணேசன் ஹோட்டலுக்கு கூட்டிகிட்டு போனான். பார்க்க பத்திரிகை ஆசிரியர் கிருஷ்ணா மாதிரி தான் எனக்கு தெரியுது..."

"சரி நீ போ... மிச்சத்த நான் பார்த்துக்கறேன். ஆமா அந்த நல்லசாமி பத்தி எதாவது தெரியுமா?"

"மலை பூரா ராவிட்டோம். கண்ணுலையே படலை. அப்படி ஒரு ஆள்

இருக்கற மாதிரியே தெரியலைங்கறாங்க. சிலர் இருந்தாரு. இப்ப இல்லை இமய மலை பக்கம் போயிடிச்சுங்கறாங்க..."

"சரி நீ போ... நான் சொல்லலை ஞானம். சாமியார் அது இதுங்கறதெல்லாம் பொய். இது அந்த அப்துல் வேலைதான். நீ வேணா பாரு அவன் நிச்சயம் அந்த ஹோட்டல்ல அவங்கள சந்திக்கப் போறான். அப்ப தெரிஞ்சிடும் என் கணிப்பு சரியா தப்பான்னு..."

"பாப்போமே... அப்படி மட்டும் நடக்கட்டும். அந்த அப்துல் ஹோட்டலை விட்டு வெளியே வந்து மறுநொடி பீஸ் பீஸாவான் பாரு..."

கருவுகிறான் ஞானம்.

"ஏய் நீ பாட்டும் எக்குத்தப்பா எதை யாவது எண்ணி வைக்காதே. அப்புறம் விஷயம் ரொம்ப சிக்கலாயிடும். அவன்னு தெரியட்டும். பிறகு பேசிக்குவோம்."

ஒருவருக்கொருவர் சமாதானங் களையும் கூறிக் கொள்கின்றனர். அப்படியே கிளம்பி ஆளுக்கொரு காரில் ஏறி அந்த லாட்ஜுக்கு பக்கத்தில் போய் பதுங்கிக் கவனிக்கவும் ஆரம்பிக்கின்றனர்.



## 12

லாட்ஜில் இருந்து கொண்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்தபோது

அனல் பறந்து கொண்டிருந்தது. சாரல் கொஞ்ச வேண்டிய வேளை. பசுமை புத்துணர்ச்சியோட பொசிந்து ஒருவகை மூலிகை வாசத்தை இழைய விடும் பொழுதும் கூட.

கிருஷ்ணா ஒரு சிகரெட்டுடன் குற்றாலம் இப்படி வற்றாலமாகி காய்ந்து கருகிக் கிடப்பதை பார்த்து பெருமூச்சு விடுகிறார்.

“ஊர் ரொம்ப மாறிப்போச்சு கோகுல். முன்னல்லாம் எப்படி இருக்கும். நீ குறவஞ்சி படிச்சிருக்கியா...? அருணா சலக் கவிராயர் என்னமா வருணிச் சிருப்பார் தெரியுமா? நல்லவேளை இப்ப அவர் உயிரோட இல்லை...''

“அதிகப்படியாயிட்ட வாகனங்கள் - அது விட்ற புகை கூடவே வீட்டுக்கு வீடு ஃபிரிட்ஜ், ஏ.சி.ங்கற சொகுசு வளர்ச்சி... அதுல இருந்து வெளியேறும் கேஸ் எல்லாமா சேர்ந்து வானத்துல ஓசோன் படலதுல பெரிய ஓட்டை போட்டுடுச்சி. காத்துலையும் ஈரப்பதமே இல்லாம போச்சு. தப்பிக்க ஒரே வழி மரங்களை வளர்க்கறதும் காப்பாத்தறதும்தான். மரம் தானே சூட்டைத் தணிக்கப் போற ஒரே ஆயுதம். இது புரியாம வெட்டிச் சாய்க்கறாங்களே...?”

- சேர்ந்து கொண்டு விளக்கமும் விஸ்தாரமுமாக சலித்துக் கொள்கிறான் கோகுல்.

"கோகுல்... பேசினது போதும் காமிராவை எடுத்துக்கோ. கிளம்புவோம். ஒரு ரவுண்டு வருவோம். ஒரு ஆர்டிகிள் பண்ணுவோம் கமான்..."

- பைஜாமா, ஜிப்பா கூட ஜோல்னா என்று உருமாறி வெளிக்கிளம்ப கதவைத் திறக்கவும் சுப்பு நிற்கவும் சரியாக இருந்தது.

"எங்க கிளம்பிட்டீங்க...?"

"வெளிய ஒரு ரவுண்ட் போய்ட்டு வரலாம்னு."

"வேண்டாம். குறிப்பா சாயங்காலம் நீங்க வெளிய போகக் கூடாதுன்னு சாமி சொல்லியிருக்கு."

- கிருஷ்ணா முகம் மாறுகிறது. எதிர் கேள்வி கேட்கவும் தோன்றவில்லை. நிச்சயம் எதாவது பொருள் இருக்கும் என்கிற நம்பிக்கையோடு அவர் அறைக்குள் திரும்ப சுப்புவும் திரும்பி லாட்ஜ் வாசலில் வந்து கச்சிதமாக நிற்கிறது அப்துலின் கார்.

குறுந்தாடி நீவியபடி இறங்கும் அப்துலை லாட்ஜ் மேனேஜர் விழுந் தடித்துக் கொண்டு வரவேற்கிறான்.

"வாங்க பாய்... ஏது இவ்ளோ தூரம்?"

"ஏய்... குல்லா அப்புறம்... ஆமா ஒரு பத்திரிகைக்காரன் வந்து தங்கி இருக் கானாமே... நிஜமா?"

- மேனேஜர் தடுமாறுகிறான்.

"ஆமாம் பாய்... அதுக்கென்ன இப்போ?"

"எந்த ரூம் அந்த ஆள்...?"

"நூத்தி நாலுல இருக்கார். ஏன் பாய் எதாவது சிக்கலா?"

"என்ன... நீ... தெரியாத மாதிரி கேக்கறே? எவனோ ஒரு சாமியார் சொன்னான்னு சொல்லி கண்டதை எழுதி சிரோமணி போய்ட்டான்... அஞ்சய்யாவும் உள்ளுக்குள்ள மத்த கூட்டாளிகளும் என்னை பார்க்க வராம என் மேலேயே சந்தேகப்பட்றாங்க. அவனை உண்டு இல்லை பண்றேன்..."

"பாய்... எதுவா இருந்தாலும் இங்க வேண்டாம். சீசன் தொடங்கற நேரம்."

"மசுரு... சீஸனாம் சீஸன். பேசுனே தெரியும்சேதி."

- மேனேஜர் நடுங்கிச் சாக பாய் நூத்தி நாலை நோக்கிப் பாய... அப்துல் பாயின் அடாவடி அத்தனை பிரசித்தி!

டொக்... டொக்...

"யாரு... யாரு..." கதவைத் திறக்கிறான் கோகுல். பாய்!

"நீங்க..."

"உம்... உன் எமன்..." - பாய் தள்ளிக் கொண்டு முன் வர பின்னால் ஜால்ராப்படை.

கிருஷ்ணா விழுந்தடித்து நிமிர்கிறார்.

"ஏய்... என்ன இது - யார் நீ?"

"அப்துல்... தெரியல மர வியாபாரி அப்துல். எம்.பி. ஜலாலோட மாமா..."

"உக்காருங்க. என்ன விஷயம்?"

"உக்கார வரலை... எச்சரிக்க வந்துருக்கேன். யாரோ சாமியார் சொன்னான்னு எதை எதையோ எழுதி எங்களை ஒழிச்சுக்கட்டலாம்னு பாக்கறியா...?"

"முதல்ல அமைதியா பேசுங்க. நான் ஒரு பெரிய பத்திரிகையோட ஆசிரியர். இப்படி பேசறது நல்லா இல்லை."

"நீ எழுதுனது சரியா?"

"என்ன தப்பா எழுதிட்டேன்?"

"சாமியார் பய எவனோ சொன்னான் - கொலை செய்வேன் அது இதுன்னு... அதை அப்படியே போட்றே... யாருய்யா அந்த சாமியார்? அவன் சொன்னா அதை அப்படியே போடுவீங்களா... இப்ப நான் சொன்னா போடுவியா?"

"போட்றதுனால சமூகத்துக்கு நன்மை உண்டாகும்னா போடுவோம். ஆமா நீங்க ஏன் குதிக்கறீங்க. அதனால எங்க உங்க உயிர் போயிடும்கற பயமா?"

பாய் அதை கேட்டு பலமாக சிரிக்கிறான்.

"நல்லா ஜோக் அடிக்கிறே நீ பட்ட பகல்ல நடு ரோட்ல கொலை செய்துட்டு மீண்டு வரத்தெரியும் எனக்கு. ஞாபகத்துல வை."

"நல்ல ஸ்டேட்மெண்ட் ஒண்ணு தெரிஞ்சுக்குங்க. இந்த மாதிரி மிரட்டலுக்கெல்லாம் மசியற ஆள் நான் கிடையாது."

"வேண்டாம். பொழைக்கற வழியப் பாரு. எதாவது வேணும்னா கேள் தரேன். இது நல்லா இல்லை."

"ஏதாவதுன்னா?"

"என்னய்யா நீ... உரிச்சு சொன்னா தான் புரியுமா? எத்தினி சினிமா பாக்கறே. மாசம் ஒரு தொகை உனக்கு வந்துடும். நெட்கேஷா. இந்த மலைல நடக்கற எந்த ஒரு விஷயம் பத்தியும் மூச்சு விடாதே. யாராவது கட்டுரை கொடுத்தாலும் போடாதே."

"நான் எங்க கூட்டாளிங்களோட சேர்ந்து உனக்கு இந்த பக்கத்துல ஒரு பங்களாவே வாங்கித் தரேன்."

"அப்புறம்?"

"கேட்கற தொனியே நல்லா இல்லை. நீ எங்களோட வியாபாரம் பேச வந்திருக்கேன்னுதான் எனக்கு தகவல் வந்துச்சு. அதை நம்பித்தான் நான் வந்துருக்கேன். நீ என்னடான்னா கால்ல விழுவாம எதுத்து பேசிகிட்டே போறியே..."

"நான் வியாபாரம் பேச வந்துருக்கேனா. எந்த புத்திசாலி இப்படிச் சொன்னது?"

"எனக்கு போன் வந்துச்சே."

"சாரி. நான் வியாபாரம் பேச வரலை. ஒரு அற்புதமான மனிதரை தரிசனம் பண்ண வந்திருக்கேன்."

"யார் சாமியாரையா?"

"அது யாரா இருந்தா உங்களுக் கென்ன? கெட் அவுட்."

"அப்ப சாமியார் நிஜமா...?"

"பொய்னு நீங்க நினைச்சா நான் என்ன பண்ணட்டும்."

"அரே பாய்... அப்படின்னா நான் இன்னும் அரை மணி நேரத்துக்குள்ள செத்துடுவேனா?"

"என்ன சொல்றீங்க..."

"முதல்ல போய் வியாபாரம் பேசு. சாமியார் விஷயம்லாம் பொய் உங்களை மடக்க பத்திரிகைக்காரங்க செஞ்ச செட்டப் அதுன்னு ஒரு போன் வந்துச்சு நிஜமான்னு கேட்டேன். வியாபாரம் பேசத்தான் நீங்க வந்துருக்கறதாகவும் தகவல் தந்தாங்க. சரின்னு கிளம்பும் போது இன்னொரு போன். அப்துல் நீ இன்னிக்கு அஞ்சு மணிக்கெல்லாம் வபாத் ஆயிடுவேன்னு..."

கிருஷ்ணா அப்துலின் பேச்சைக் கேட்டு ஒரு க்ஷணம் தடுமாறுகிறார். கெடிகாரத்தை பார்க்கிறார். மணி நான்கு அம்பது.

"ஏய் நிஜமா சொல்லு... சாமியார்னு ஒரு ஆள் நிஜமா. அதுதான் அஞ்சய்யா சிரோமணியை எல்லாம் கட்டிப் போட்டுச்சா. எனக்கும் கெடு விதிச் சிருக்கா?"

"எங்களுக்கும் எல்லாமே புதிரா இருக்கு மிஸ்டர் அப்துல். சத்யமா சொல்றேன். எங்களுக்கு எதுவும் தெரியாது."

"சாமியார் நிஜமா... அவன் இருக்கானா...?" பாய் பற்கள் நறநறக்க கேட்பதை பார்த்தால் கோபப்பந்து அவனுக்குள் உருளுவது நன்றாகவே புரிகிறது.

கிருஷ்ணா கோகுல் முகத்தை பார்க்க - கோகுல் கிருஷ்ணா முகத்தை பார்க்க-

"அரே... கேக்கறேன்ல- யாருய்யா அந்த சாமியார்...?"

"எங்களுக்கே அவரைச் சரியாத் தெரியாது. இனிமே தான் பார்க்கப் போறோம்."

"என்ன காது குத்தறே... தெரியாம தான் அந்த ஆள் சொன்னதை பத்திரிகைல போட்டியா?"

"நான் சொன்னதை நீங்க சரியா கேக்கலை. சரியாத் தெரியாதுன்னு சொன்னேன் நான்."

"டேய்... இனி இவங்க கிட்ட பேசறதுல பிரயோஜனம் இல்லை. இங்கையே ரெண்டு பேர் இருங்க... அந்த சாமியார்ப் பய வந்தா சொல்லுங்க நான் கிளம்பறேன்..."

அப்துல் பாய் ஐந்து மணி பயத்துடன் உதறிக் கொண்டு கிளம்புவது கூட்டாளி களுக்கே புரியத்தான் செய்கிறது. மிடறு

விழுங்கிக் கொண்டு ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கின்றனர்.

பாய் கெடிகாரத்தை பார்க்க மணி நான்கு ஐம்பத்தி ஐந்து.

வேகமாக அங்கிருந்து கிளம்ப ஆரம்பிக்கிறார்.

அறை வாசலில் நின்று திரும்பி ஒரு கடூர லுக் விட்டு கையைச் சொடுக்கியபடி கடைசி எச்சரிக்கை வேறு செய்கிறார்.

"நீங்க அந்த சாமியார் எல்லாரும் கொஞ்ச நேரத்துல நான் யாருங்கறத தெரிஞ்சிப்பீங்க. எல்லாத்துக்கும் துணிஞ்சுதான் இந்த தொழிலுக்கு நான் வந்துருக்கேன்.

ஒத்துப் போயிட்டா எல்லாருக்கும் நல்லது. இல்லாட்டி..."

ரஜினி ஸ்டைலில் கையை வீசியபடி பாய் நடக்க எஸ் கார்ட் ஒருவன் பின் தொடர்கிறான். ரிசப்ஷனை தாண்டும் போது மேனேஜர் பரிதாபமாக பார்க்கிறான்.

"வந்தது போனது எதுவும் யாருக்கும் தெரியக் கூடாது. அந்த பத்திரிகைக் காரனையும் எனக்கு தெரியாம போக விடக் கூடாது."

"சரிங்க பாய்..."

வாசலுக்கு வந்து கார் கதவை திறந்து ஏறப்போகும் போது புத்தியில் ஒரு சின்ன எச்சரிக்கை.

'காரில் ஒரு வேளை ஐந்து மணிக்கு வெடிக்கும்படியாக பாம் இருக்குமோ?'

"டேய்... கார் வேண்டாம் கார்ல பாம் இருக்கான்னு பார். நான் நடக்கறேன்."

கித்தப்பாக திரும்பி நடக்க ஆரம்பிக்கிறார் பாய். வீதி வெறிச்சோடி கிடந்தாலும் ஒரு மாடி ஜன்னல் வழியாக துப்பாக்கி ஒன்று பாயை நோக்கி நீள்கிறது.

"இதுக்கு மேலயும் பாயை விட்டா பத்திரிகைக்காரனோட சேர்ந்து நம்மை எல்லாம் விழுங்கிடுவான். போட்டுத் தள்ளுடா..."

"ஞானத்தின் கட்டளையோடு ஸ்ட்ரிக் கரில் ஒருவன் ஆள் காட்டி விரல் அழுத்தம் காட்டுகிறது."

குண்டுக்கு சிறகு முளைக்கிறது ஈட்டியாக பாய்ந்து பாயின் தொண்டைப் பாகத்தை துளைக்கிறது.

சுருண்டு விழுகிறார் பாய். சப்தம் நாலா புறமும் கேட்க எஸ்க்கார்ட் குண்டு வந்த திக்கை பார்க்க கச்சிதமாக தெரிகிறது ஞானத்தின் முகம்!



## 13

இன்ஸ்பெக்டர் விசாரணையை தொடங்கியிருந்தார்.

"மிஸ்டர் கிருஷ்ணா என்ன நடந்துச்சு நீங்க எதுக்கு இங்க வந்தீங்க?"

"நான் குற்றாலம் வந்தது இருக்கட்டும் இன்ஸ்பெக்டர் இந்த விசாரணை கண் துடைப்பா இல்லை சீரியஸாவேவா..."

கிருஷ்ணா இப்படி கேட்பார் என்று துளிகூட எதிர்பார்க்கவில்லை இன்ஸ் பெக்டர்.

"என்ன கிருஷ்ணா இது... ஒரு பொறுப்புள்ள பத்திரிகை ஆசிரியர் இப்படியா பேசுவீங்க?"

"என்ன பண்றது.... பொறுப்புள்ள இன்ஸ்பெக்டர்கள் பொறுப்போட நடந் துக்கலையே..."

"வாட் டு யூ மீன்..."

"ஐ மீன்... லஞ்சத்துக்கும் சில ஆசைகளுக்கும் பலியாகி பல தாதாக் களை வளர்த்து விட்டுட்டீங்கன்னு சொல்றேன். அவங்க மலை மட்டை ஒண்ணை விடலை."

"நான் என்ன நடந்ததுன்னுதான் கேட்டேன். எங்களைப் பற்றிய விமர்சனத்த இல்ல..."

"விமர்சனத்துலயே விடையும் இருக்கு இன்ஸ்பெக்டர். அப்படி வளர்ந்த ஒரு தாதா என் மேல சந்தேகப்பட்டு என்னை பார்த்து மிரட்டினான். எங்க பத்திரிகை சுதந்திரத்துக்கே உலை வைக்கப் பார்த்தான்."

"லுக் கிருஷ்ணா. உங்களை மிரட்டினது இருக்கட்டும். அவரை சுட்டது யார். உங்களுக்குத் தெரியுமா?"

"தெரியாது. சப்தம் கேட்டது. எட்டிப் பார்த்தா சுருண்டு கிடந்தார். அவரோட எஸ்கார்ட் ஒரு மாடிக் கட்டிடம் நோக்கி ஓடிகிட்டிருந்தார்."

"அஞ்சு மணிக்கு அவர் செத்துடு வார்னு கொலை மிரட்டல் வந்ததாமே..."

"அது பற்றி எனக்கு ஒண்ணும் தெரியாது."

"அந்த மிரட்டலை செய்தது ஒரு சாமியார்னும் அவரை உங்களுக்கு தெரியும்னு கூட கேள்விப்பட்டேனே..."

"சாமியாரை எனக்கு தெரியும். அவ்வளவுதான். ஆனா அவர்தான் கொலை மிரட்டல் செய்தாரான்னு தெரியாது."

"யார் அந்த சாமியார்?"

"நாங்களே அவரை தேடித்தான் வந்துருக்கோம். இனிமேதான் பார்க்கணும்."

"என்ன மிஸ்டர் கிருஷ்ணா. காதுல பூவைக்கறீங்களா. அவரைப் பற்றி பிரமாதமா உங்க பத்திரிகைல எழுதி யிருக்கீங்க. கொலைகளை சாமர்த்தியமா செய்யப் போறார்னும் அவர் சொன்ன தாவே போட்டுருக்கீங்க, இப்ப கேட்டா தேடி வந்துருக்கேன். இனிமேதான் பாக்கணும்னா... அந்த சாமியார் என்ன கேர் ஆஃப் பிளாட்பாரமா?"

"கரெக்டா சொன்னீங்க... அவரை நான் பிளாட் ஃபாரத்துலதான் பார்த் தேன்."

“ஒரு பிளாட்ஃபாரவாசி சொன்னதுக்கா அவ்வளவு முக்கியத்துவம் தந்து செய்தி போட்டீங்க?”

“போட்டபடி நடந்துருக்கே. எப்படியோ இந்த நிமிஷம் வரை மூணு மரம் வெட்டி அசுரர்கள் பாதிக்கப்பட்டு ஒருத்தர் சுடுகாட்ல, ஒருத்தர் ஜெயில்ல ஒருத்தர் ஹாஸ்பிடல்லன்னு கிடக்கறாங்களே.

எங்களுக்கு சில சமயங்கள்ல யார் சொல்றாங்கங்கறது பெரிசு கிடையாது. என்ன சொல்றாங்கங்கறத தான் பெரிசு...”

இன்ஸ்பெக்டர் முகம் இறுகுகிறது. பதில் சொல்ல முடியாத அவஸ்தை நன்றாகவே தெரிகிறது.

“இப்ப கூட கெட்டுப் போயிடலை. இந்த மாதிரி மலை விழுங்கிகளை வளர விடாம பாத்துக்குங்க. இப்படி எல்லாம் நடக்காது...”

“எப்படி எல்லாம்?”

“மழையே இல்லாம ஊர் காயாது... கடவுளே சிந்தனைன்னு இருக்க வேண்டிய சாமியார்கள் கொலைகள் பற்றி சிந்திக்க மாட்டாங்க. எங்களைப் போன்ற பத்திரிகையாளர்களும் பூடகமா செய்தி போட வேண்டிய அவசியம் இருக்காது...”

“அப்ப நாங்கதான் எல்லா தப்புக்கும் காரணமா?”

"நீங்களும் ஒரு காரணம். நீங்க மட்டுமேன்னு நான் சொல்லலை. இப்ப கூட சொல்றேன் உங்களுக்கு நல்லா தெரியும் எல்லா தவறுகளுக்கும் யார் காரணம்னு."

"நான் பாத்துக்கறேன். இப்ப எங்க இருக்கார் அந்த சாமியார்?"

"திரும்பத் திரும்ப அவரையே ஏன் தேடறீங்க?"

"எங்கியோ இருந்துகிட்டு ரொம்ப சாமர்த்யமா உங்களையும் இந்த கூட்டத்தை சேர்ந்தவங்களையும், பயன் படுத்தி மூணு பெரிய தலைகளை ஒழிச்சுட்ட புத்திசாலித்தனத்துக்கு பாராட்டு சொல்ல."

"இதை நான் நம்பவா?"

"சத்யமா சொல்றேன் கிருஷ்ணா. இந்த வெயில், தண்ணிக்கு தத்தளிக்கிற நிலைப்பாரு. வியர்வை புழுக்கம் இதெல்லாம் எனக்கு மட்டும் இல்லையா? தண்ணியில்லாத பூமியில கட்டுகட்டா பணம் இருந்து என்ன பிரயோஜனம். பூமி விளைய வேண்டாமா? விளைஞ் சாதானே பணத்தால வாங்க முடியும். இயற்கைங்கறது மிகப் பெரிய சக்தி வணங்கிக் கொண்டாட வேண்டிய விஷயம். வெட்டிச் சாய்க்கற விஷய மில்லைங்கறது எனக்குத் தெரியாம இல்லை..."

கிருஷ்ணா இன்ஸ்பெக்டரை சற்று மதிப்புடன் பார்க்கிறார்.

இன்ஸ்பெக்டர் உணர்ந்துதான் பேசுகிறார்.

நன்றாகவே புரிகிறது.

"ஆமாம். இப்ப அப்துல் நிலை எப்படி இருக்கு?"

"பிழைக்கறது ரொம்ப கஷ்டம்னுதான் டாக்டருங்க சொல்றாங்க. அவரோட எஸ்கார்ட் சொன்னதை வெச்சுப் பார்த்தா ஞானம்தான் இப்படி செய்துருக்கான். அவனை கூடிய சீக்கிரம் புடிச்சிடுவோம்."

"புடிச்சுடுவீங்களா இல்லை பிடிச்சு விட்டுடுவீங்களா?"

"கிருஷ்ணா... ரொம்பதான் சந்தேகத்தோட இருக்கீங்க நீங்க. இனி அவங்க தப்பிக்க இடமே இல்லை. பிடிச்சு நிச்சயமா உள்ளே போடுவேன்."

"முதல்ல அதை செய்யுங்க."

"ஆமா அந்த சாமியார்."

"பார்த்தீங்களா விடமாட்டேங்கறீங்களே. சத்யமா சொல்றேன். அவர் இருப்பிடம் தெரியாது. அவரை இனிமேதான் பாக்கணும். அவரா வருவார்னு எதிர்பார்க்கிறோம். அப்படிதான் தகவல் சொல்லிட்டிருக்கார்."

இன்ஸ்பெக்டர் அரைமனதாக கிளம்புகிறார். போகும் போது நின்று "வந்தா சொல்லுங்க, நான் பாக்கணும் கால்ல விழணும்" என்று!



# 14

குற்றாலமலை மேல் மழை மேகத் திரளல், பார்க்க ரம்யமாக இருக்கிறது. வியாபாரிகளின் முகங்களில் எல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கு.

"மழை வரும்போல இருக்கு... வரும் போல என்ன வந்திருச்சு. அப்பாடா சீஸன் லேட்டானாலும் களை கட்டினா சரி."

ஒரு தெருவோர கடைக்காரன் துள்ளிக் குதிக்கிறான்.

காற்றில் லேசாய் ஈரம் கலந்திருக்கிறது.

ஐந்தருவிப் பக்கமாய் சுற்றிவரும் கிருஷ்ணா கோகுலின் மேனிமேல் மோதி சிலிர்ப்பிக்க விடுகிறது.

"பாத்தியா கோகுல்... அசுரவதம் முடிஞ்சது தெரிஞ்சு மழை எட்டிப் பார்க்க தொடங்கிவிட்டதை."

"நல்லச்சாமி எட்டிப் பார்க்கலையே சார். எனக்கு இப்ப அந்த கவலை."

"காரணமில்லாம இப்படி பண்ண மாட்டார் அவர். பொறுமையா இருப்போம். நிச்சயம் கண்ணுலபடுவார்."

கிருஷ்ணா வயதுக்கேயுரிய பக்குவம் காட்டுகிறார். மழையும் விழ ஆரம்பிக்கிறது.

'வராதா என்று ஏங்கிய மழை வந்துவிட்டது. இனி தாகம் தீரும். பசுமை

தழைக்கும், இயற்கை வாழும். சிறு மழையாக இது இல்லாமல் பெருமழை யாக வர்ஷிக்கட்டும் கடவுளே. கருணை செய்.'

மழையில் நனைந்தபடியே கிருஷ்ணா பிரார்த்தித்துக் கொள்கிறார்.

"வாங்க சார்... ஓரமா ஒதுங்கலாம்."

மரத்தடி ஒன்றில் போய் நிற்கின்றனர். சில விநாடி கழித்து, "மழையின் போது மரத்தடியில் ஒதுங்கக் கூடாது இடி விழும்" என்று சொல்லிக் கொண்டே சுற்றிச் சுற்றி பார்த்ததில் அருகில் ஒரு குகை போன்ற பரப்பு தெரிகின்றது.

"கமான் கோகுல்... , தற்காலிகமாக அங்க ஒதுங்குவோம்."

கிருஷ்ணா வாலிபனாட்டம் ஓடி அந்த குகைக்குள் நுழைகிறார். பின் ஓடுகிறான் கோகுல்.

சடசட என மழை பின்னி எடுக்க ஆரம்பிக்கிறது.

உள் பதுங்கிய நிலையில் முகத்து மழை நீரை வழித்துப் போட்டபடி உள்ளே பார்த்தபோது தூக்கி வாரிப் போட்டது. உள்ளே அகல்விளக்கு ஒன்றின் முன் யோக நிலையில் நல்லச்சாமி!

"சார்... நல்லசாமி இங்க இருக்கார்."

"மை குட் நெஸ். நமஸ்காரம் சாமி" நல்லசாமி கண் திறக்கிறது. உட்காரச் சொல்கிறது.

"எங்க உங்களை சந்திக்க முடியாம போயிடுமோன்னு நினைச்சேன்" உட்கார்ந்து கொண்டே பீடிகை போடுகிறார் கிருஷ்ணா.

"சாமி நீங்க சொன்ன மாதிரி செய்யப் போய் - நினைச்சுப் பார்க்க முடியாதபடி பெரிய தலைங்க விழுந்துடிச்சு. பிரமிப்பா இருக்கு. இவங்களை இப்படி செய்தா தான் அடிக்க முடியும்னு புரிஞ்சு வெச்சுகிட்டு திட்டமிட்டு செய்த மாதிரியும் இருக்கு. இதனால உருவான அதிர்ச்சி இன்னிக்கு நாடு பூரா பரவி இருக்கு. ஒரு சிடிசனா உங்களைப் பாராட்ட வார்த்தைகள் இல்லை."

கோகுலின் சிலிர்ப்பை சின்னப் புன்னகையுடன் ரசிக்கும் நல்லச்சாமி முதலில் அவன் தன்னைப் பற்றி நினைத்ததை எல்லாம் ஒரு வினாடி எண்ணிப் பார்க்கிறது.

"சாமி இப்படி பேசாம இருந்தா எப்படி? நாங்க நிஜமாலுமே மெய் சிலிர்த்துப் போய் வந்துருக்கோம். இன்சாட் யுகமா இருக்கலாம். ஆனாலும் நடந்துட்ட விஷயங்களை நினைச்சா நம்மை மிஞ்சின ஒரு சக்திதான் எப்பவும் பெரிசுன்னு படுது..."

"சாமி பேசுங்க. அங்கங்க டெலிபோன்ல பேசி அவங்களை திணற அடிச்சது யார்? என் கனவுல எப்படி வந்தீங்க? இந்த பிரச்சினையை தீர்க்க நாங்க பயன்படுவோம்னு எதை வெச்சு தீர்மானிச்சீங்க?"

"நான் சொல்றேன்" என்றபடி ஒரு குடையை மடக்கிக் கொண்டு உள்ளே நுழைகிறார் சுப்பு.

"டெலிபோன்ல பேசி திணற அடிச்சது நான்தான். சாமி செய்யச் சொன்னதை செய்தேன். மற்றபடி சாமி இந்த பகுதியை விட்டு எட்டிக்கூட பார்க்கலை. அது இங்கேயேதான் இருக்கு."

"நீங்க?"

"நான் ஒரு ரிடையர்ட் டீச்சர். என்னோட சீனியர் இந்த நல்லசாமி. பல்லடம் தோப்பில் தென்னந்தோப்பு வீடுன்னு இப்பவும் பல லட்சம் சொத்து உண்டு இவருக்கு. அதனாலேயோ சம்சார பந்தம் சாமிக்கு பிடிக்கலை. அறிவைக் கொண்டு பணம் சம்பாதிக் கறதவிட ஞானம் சம்பாதிக்கறதுதான் கஷ்டம்கறது சாமியோட அபிப்பிராயம். ஏன்னா பணம் கூட வரப்போறதில்லை. ஆனா ஞானம் அப்படியில்லை. ஒரு பிறப்பல்ல ஏழு பிறப்புக்கு அது கூட வரப்போற விஷயம். அதனால சாமியும் ஞானத்தைத் தேடி இமயம் வரை போய் இருபது வருஷ காலம் சுத்தி பல விஷயங்களை கத்துகிட்டு இந்த மலைப் பக்கம் வந்தது. இங்க வந்தப்புறம்தான் நானும் வந்து சேர்ந்தேன். பிறர் மனசப் படிக்கறது, ஸ்வப்ன அலைகள்ள நுழையறதுன்னு எத்தனையோ யோக வித்தைகள் சாமிக்கு அத்துபடி. அப்படித் தான் உங்க கனவுல வந்தது. உங்களை

இந்த சமாச்சாரத்துக்கும் பயன்படுத்தி கிட்டது.”

மூச்சு விடாமல் சொல்லி நிறுத்துகிறார் சுப்பு.

“ஸ்வப்ன அலைகள்ல நுழையறதா புதுசா இருக்கே?” கோகுல் பிடிக்கிறான்.

“புதுசு இல்ல... ரொம்ப பழசு. மனுஷனும் ஒரு ரேடியோ மாதிரிதான். எண்ண அலைகளை ட்யூன் பண்ற சமாச்சாரம், அது...”

“இவங்கள இப்படித்தான் கொல்ல ணும்னு தீர்மானிச்சதுக்குக் காரணம்?”

“இதுதான் சரியான வழி. சுலபமான வழியும்கூட அவ்வளவுதான். உங்களை இழுத்து போட்டதுக்கு காரணம் இந்த விஷயம் புத்தகம் மூலமா எல்லார்க்கும் தெரியணுங்கறதால...”

“இங்க இருக்க இவங்கள ஒழிக்கற தால இந்தப் பகுதி வேணும்னா சீர் படலாம். ஆனா மற்ற பகுதிகள். அங்குள்ள மரம் வெட்டிகள் மாற வேண்டாமா? பயம் வர வேண்டாமா.”

“எப்படியோ நாங்க ஒரு நல்ல காரியத்துக்கு பயன்பட்டதுல மகிழ்ச்சி. சாமி இனியாவது நல்ல மழை பெய்யும்தானே?”

நல்லசாமி பேச ஆரம்பிக்கிறது.

‘பெய்யும், நிதானமில்லாம பெய்யும். காய்தலும் சரி, பெய்தலும் சரி இனி நிதானமில்லாமதான் நிகழும். மனிதன்

இயற்கையை நேசிக்க ஆரம்பிச்சாதான் நிதானம் வரும். அரசு குடும்பக் கட்டுப்பாட்டை விடவும், தீவிரமா எய்ட்ஸ் பிரச்சாரத்தைவிட தீவிரமா மரம் வளர்ப்பை பற்றிதான் சிந்திக்கணும். இல்லேன்னா பூமியை நீரும் நெருப்பும் மாறி மாறி மூழ்கடித்துக் கவிழ்த்துடும்.'

உபதேசங்கள் பலனற்றுப் போன நிலையில் ஒரு யோகியான நான் இந்த எண்ணங்களை உருவாக்கத்தான் இப்படிப்பட்ட செயல்கள்ல ஈடுபட்டேன்.

கடவுளே பிரச்னைக்கு ஏற்ப ஆயுதம் எடுத்தவர்தான். இதுல தப்பு இல்லை.

இப்பகூட என் நோக்கம் முழுசா ஈடேறி முடிஞ்சுடலை. இதுவரை நடந்த தெல்லாம் புத்திசாலித்தனமான மோதல். இனி நடக்கப் போற மோதல்ல இயற்கை பேசப் போகுது. அதை நீங்க பார்க்கப் போறீங்க... என் பிரார்த்தனையும் இயற்கை பேசணும்கறதுதான்."

- அது பேசினாதான் பயம் வலுவாகும்.

"என்ன சொல்றீங்க சாமி..."

"பொறுத்திருந்து பாருங்க..."



## 15

அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் இருக்கும் அந்த மர வீட்டில் இருந்து மெல்ல வெளியே எட்டிப் பார்க்கிறார் ஞானம்.

அப்துலை தவறாகப் புரிந்து கொண்டு சுட்டுத் தள்ளியதன் பலன். போலீஸ் தேடும் நிலையில் இப்படி தலைமறைவாக வேண்டியதாகிவிட்டது.

வெளியே மழை பிய்த்து வாங்கிக் கொண்டிருக்கிறது. புயலால் வந்த மழை!

அந்த மழையை கிழித்தபடி ஒரு சாக்கைக் கவிழ்த்துக் கொண்டு காட்டுப் பாதைக்குள் வந்து கொண்டிருக்கிறான் ஒருவன்.

"யார்... இருளப்பனா?" - ஞானம் பார்க்கும் பார்வையில் தீ பறக்கிறது. இந்த இடம் தெரிந்து வருபவன் அவனாகத் தான் இருக்க முடியும்.

இருளப்பனேதான்...! இருளப்பன் மர வீட்டின் படிகளில் தாவி ஏறி சாக்கை கழட்டிப் போட்டபடி உள் நுழைகிறான்.

"வா இருளப்பா... ஏன் லேட்டு?"

"லேட்டா... வந்ததே பெரிசு ஞானம். போலீஸ் கண்ல இருந்து தப்பிக்க நான் பட்டபாடு எனக்குதான் தெரியும்."

"எப்படி இருக்கு நிலைமை...?"

"புலி வால் பிடிச்ச கதை தான். ஒரு பக்கம் போலீஸ். மறுபக்கம் அப்துலோட ஆளுங்க. நீ போலீஸ்கிட்ட இருந்து கூட தப்பிடலாம். அப்துல் ஆளுங்க கிட்ட இருந்து மட்டும் தப்பவே முடியாது. அப்படி ஒரு கோபத்தோட அலைய றாங்க... ஏன் தெரியுமா?"

“தெரியாம என்ன... அந்த சாமியார்ப் பய இரண்டாவது தடவையும் ஜெயிச்சுட் டான். நான் அவசரப்பட்டுட்டேன். அப்துல பாத்து மன்னிப்பு கேட்டுக்கிட்டா சரியா போயிடாதா?”

“எங்க போய் கேப்பே... பரலோகத் துக்கு போயா?”

“என்ன சொல்றே...?”

“அப்துல் போய் சேர்ந்துட்டான். போலீசும் மேல்மட்டம் வரை விஷயம் போய் செமடோஸ் வாங்கியிருக்கு. இன்னும் ஒரு பத்து வருஷத்துக்கு இந்த பக்கம் ஒரு பய ஒரு செடிய கூட புடுங்க முடியாது. ஜனங்களும் வாயைப் பிளந்து கிட்டு விஷயத்தை பாத்துகிட்டு இருக்காங்க.”

மழை போனதுக்கு காரணமே மரம் போனதுதான்னு ஒரு பிரசாரம் ரொம்ப வலுவா கிளம்பிடிச்சு... மழை நிக்காம பெய்யவும் அதான் காரணம்.

“நீ பேசாம சரணடைஞ்சுடு. சொல்லத் தான் முக்கியமா வந்தேன்.”

- ஞானம் முகம் வெளிறிப் போகிறது.

“வேற வழியே கிடையாதா?”

“இருந்தா விட்ற ஆளா நான். உன் வக்கீலையும் பார்த்துட்டுதான் வரேன். அவரை சரணடையச் சொல்லுங்க. ஜெயில்ல ஏ. கிளாஸ் வாங்கித்தர பாக்கறேங்கறார்.”

"சரி கிளம்பு..." - ஞானம் அத்தனை சீக்கிரம் சரணடையக் கிளம்புவான் என்று இருளப்பனே நினைக்கவில்லை.

"மழை நிக்கட்டும்..."

"இது நிக்காது. நீ கிளம்பு. அப்துல் ஆளுங்களுக்கு இந்த இடம் தெரியும். இங்க நான் இருக்கறது நல்லது இல்ல. எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்... நடநட."

- மழை என்றும் பாராமல் ஞானம் கிளம்புவதன் மர்மம் புரிந்து அந்த இறுக்கமான வேளையிலும் சிரித்து விடுகிறான் இருளப்பன்.

●

ஸ்டேஷன்.

சொட்டும் ஈரத்தோடு வந்து நிற்கும் ஞானத்தைப் பார்த்து இன்ஸ்பெக்டர் திகைக்கிறார்.

விலங்கு மாட்டி லாக்கப்பில் பூட்டு கிறார். சந்தோஷமாக பத்திரிகைகளுக் கெல்லாம் செய்தியும் தருகிறார். மறக்காமல் லாட்ஜில் தங்கி இருக்கும் கோகுலுக்கும், கிருஷ்ணாவுக்கும் தகவல் போகிறது. கிருஷ்ணாவும் கோகுலும் ஞானத்தை ஒரு பேட்டி எடுக்கும் ஆசையோடு மழை என்றும் பாராமல் ஓடி வருகின்றனர், "ஞானம் போல் இன்னும் எத்தனை பேர்...?" கேள்வி களால் கொத்துகின்றனர்.

ஞானம் எந்த கேள்விக்கும் பதில் சொல்வதாக தெரியவில்லை.

அப்துல் ஆட்களிடம் அடிபட்டு சாவதை விட ஜெயிலுக்கு வந்தால் கொஞ்ச நாளில் வெளியே வந்துவிடலாம். இல்லாவிட்டால் சற்று சௌகரியமாக தூக்கில் தொங்கி வசதியாக சாகலாம் என்று நினைப்பது மட்டும் நன்கு தெரிகிறது.

"என்ன மிஸ்டர் கிருஷ்ணா எதாவது செய்தி கிடைச்சதா?"

"நத்திங்... வாயே திறக்கமாட்டேங் கறார்."

"இங்க வாய திறக்காம இருக்கலாம். ஆனா மாஜிஸ்திரேட்கிட்ட அப்படி இருக்க முடியாது. கோர்ட்ல புரொட்யூஸ் பண்ணி 15 நாள் காவல்ல வெச்சு என்கொயரி கண்டினியூ பண்ணப் போறோம். மரம் வெட்டி கோஷ்டிகளோட ஜாதகம் தெரிய வேண்டாமா...?"

"குட்..." - கிருஷ்ணா பாராட்ட ஞானத்தை அவர் பார்க்கும் போதே இரண்டு போலீஸ்காரர்கள் பிடித்து ஜீப்புக்கு அழைத்துச் செல்ல முயலுகின்றனர்.

வெளியே நிற்காமல் பெய்யும் மழை!

ஸ்டேஷனை விட்டு வெளியேறி மழையில் சற்றுத் தொலைவு நடந்து ஜீப்பை தொட்டு ஏற முயன்றபோதுதான் அந்த அதிசயம் நடக்க ஆரம்பித்தது.

வானிலிருந்து ஒரு இடி அசுர வேகம் காட்டி அந்த அசுரன் மேல் இறங்கியது. காதைப் பிளந்தது சப்தம். அனைவரும் கண்மூடிச் சிலிர்த்து விட்டு நிமிர்ந்து பார்த்தபோது ஞானம் கரிக்கட்டையாக தெரிகிறான்.

கிருஷ்ணாவும், கோகுலும் விக்கித்துப் போகின்றனர்.

நல்லசாமி சொன்ன இயற்கையின் சீற்றத்தை பார்த்து...!

பல மரங்களை கரியாக்கியவனே இப்பொழுது கரியாக நிற்கிறான். எந்தக் காலமாக இருந்தாலும் இயற்கை பேசாமல் இல்லை. எச்சரிக்கை செய்யாமல் இல்லை.

கிருஷ்ணா புரிந்து கொள்கிறார். கோகுல் தாமதிக்காமல் ஞானத்தின் கரிக்கட்டை சரீரத்தை காமிராவுக்குள் பிடிக்கிறான்.

அது இனி எல்லா வார மாத நாளிதழ்களிலும் அச்சாகும். பார்க்கும் மனங்களை எல்லாம் உலுக்கும் - உருக்கும்.

அருகாமை மரம் மழை நீர் சடசடப் புடன் நடந்து முடிந்த வதம் பார்த்து காற்றில் ஆடுகிறது. அதனிடம் மகிழ்ச்சி தெரிகிறது.

அதன் மகிழ்ச்சியை கிருஷ்ணாவால் உணர முடிகிறது.

(முற்றும்)

# கங்கையின் பாதை

## அரு.வி. சிவபாரதி

ஸ்ரீமன் நாராயணனின் நாபியில் பிரம்ம தேவன் தோன்றினான் எனச் சொல்லப் படுகிறது. அவன் அண்ட சராசரங்களையும், சகல உலகங்களையும், பஞ்ச பூதங்களையும், எல்லா ஜீவராசிகளையும் படைத்தான்.

அதன் பின்னர் தன்னைப் படைத்த நாராயணனுக்கு பாதபூஜை செய்யும் பொருட்டு பவித்திரமான கவசம் ஒன்றையும் படைத்த பிரம்மன், அதில் தனது தவ வலிமையால் உருவான பவித்திர நீரை நிரப்பினான்.

அதற்கு கங்கா எனப்பெயரிட்டு, அதனைப் பகவான் நாராயணனின் காலடிகளில் சேர்ப்பித்தான். அவள் விஷ்ணுவின் பத்தினியானாள். பகவான் விஷ்ணுவின் பாத சேவையையே தனது கடமையாக எண்ணிச் செய்யத் தொடங்கினாள். அவள் தோன்றிய இடம் கங்கோத்ரி.

அந்த நேரத்தில் பூலோகத்தை பகீரதன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். இவன் ரகு வம்சத்தைச் சேர்ந்தவன். ஸ்ரீராம பிரானின் மூதாதையர்களில் ஒருவன். இவன் காலத்தில் நாட்டில் வறட்சி உண்டாகி பஞ்சமும் ஏற்பட்டது.

ஒரு சாபத்தால் மடிந்து சாம்பலான தனது மூதாதையர்களின் அஸ்தியைக் கரைத்து, அவர்களுக்கு நற்கதியினை

உண்டாக்கித் தரவும், நாட்டின் வறட்சி நீங்கவும், தன் மூதாதையர்களுக்கு மோட்சம் கிடைக்கவும் பகீரதன் விரும்பினான்.

அதற்குப் புனிதமான கங்கையை பூமிக்கு கொண்டு வர வேண்டும் என்று பகீரதன் விரும்பினான்.

அதனால் ஸ்ரீமன் நாராயணனைக் குறித்து கடும் தவம் இயற்றினான்.

ஊண், உறக்கம் மறந்து ஒற்றைக் காலில் பகீரதன் அவன் புரிந்த தவமும் "நாராயணா!" என்று அவன் எழுப்பிய தொடர் முழக்கமும், ஸ்ரீநாராயணரை அவனைத் திரும்பிப் பார்க்கச் செய்தது.

அவனுக்கு காட்சி தந்தார் ஸ்ரீமன் நாராயணன்.

அவரிடம் பகீரதன், "பகவானே! கங்கை மாதாவை, கங்கோத்ரியில் புறப்பட்டு, இமயத்தின் சிகரங்கள் வழியாக ஓடி, பூமியைக் குளிரச் செய்து; எனது மூதாதையர்கள் அஸ்தியைக் கடலில் கரைக்கும் இடத்தில், அவள் சங்கமமாகும்படி அருள்பாலிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டான்.

அந்த வரத்தை ஸ்ரீநாராயணனும் கொடுத்து அருளினார்.

கங்கை கிளம்ப ஆயத்தமானாள். அவள் ஆகாய கங்கையாக அதிவேகமாக வெள்ளப் பெருக்கெடுத்து கிளம்பினாள்.

அவள் வேகத்தினை தாங்கும் சக்தி பூமிக்கு இல்லை என்பதை பகீரதன் உணர்ந்தான்.

அவள் வேகத்தை தணிக்க வேண்டும். இல்லையென்றால் பூமிக்கு ஆபத்தாகிவிடும் எனப் பயம் கொண்டான்.

கங்கையின் வேகத்தைத் தணிக்க கைலாயத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் ஒருவராலேயே முடியும் என்று பகீரதன் நம்பினான்.

அதனால் ஈசனைக் குறித்து கடும் தவம் இயற்றினான்.

ஈஸ்வரன் பிரசன்னமாக தன் சடையை விரித்து கங்கையை அதில் தாங்கி, அவள் வேகத்தை தடுத்து, பூமியில் பாயும்படிச் செய்தார்.

பகீரதன் முயற்சியால் விஷ்ணு பாதத்தில் இருந்து புறப்பட்ட கங்கை நந்தி பிரயாக் என்றும், பின்னர் சிவனை தரிசித்து தாண்டிய இடத்தில் ருத்ரப்ரயாக் எனவும் பெயர் பெற்று, பகீரதன் கங்கையைத் தரிசித்த இடத்தில் பாகிரதீ என்றும் பெயர் பெற்றாள்.

கங்கை தேவி பகீரதனிடம், "நான் போகும் பாதைகள் பற்றி விளக்க வேண்டும்!" எனக் கேட்டுக் கொண்டாள்.

அதற்கு பகீரதன், "தாயே! நான் என் ரதத்தில் ஏறி முன்னால் வழிகாட்டிச் செல்கின்றேன். தாங்கள் என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்" எனக் கேட்டுக் கொண்டான்.

பகீரதன் வாயு வேகத்தில் தன் ரதத்தினை செலுத்தினான். கங்கையும் பின் தொடர்ந் தாள்.

பலகாத தூரம் சென்ற பின் பகீரதன் திரும்பிப் பார்த்தான். கங்கையைக் காண வில்லை.

தனது வேகத்திற்கு கங்கையால் ஈடு கொடுக்க முடியவில்லை போலிருக்கிறது! தான் நினைத்து சற்றே தேங்கி நின்றான். அப்போதும் கங்கை வந்து சேரவில்லை.

பகீரதன் திகைத்தான். மீண்டும் திரும்பி வந்த வழியே ரதத்தைச் செலுத்தினான். சிறிது தொலைவு சென்றதும் அவன் கண்ட காட்சி, அவனை திகைக்கச் செய்தது.

ஆம். அங்கே கங்கை ஏழு பிரிவாகப் பிரிந்து, மீண்டும் ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து, ஒரு தீவினையும் உருவாக்கி யிருந்தது. அந்த இடத்தில் சப்த ரிஷிகள் எனப்படும் ஏழு ரிஷிகளும் அமர்ந்து தவத்தில் ஆழ்ந்திருந்தனர். அவர்கள் தவத்திற்கும், ஞானத்திற்கும் கட்டுப்பட்டு, அவர்களின் பாதங்களை வருடி, அங்கே கங்கையும் தவத்தில் ஈடுபட்டிருந்தாள்.

அந்த இடமே இன்று ஹரித்துவார், ரிஷிகேஷ் என்ற புண்ணிய க்ஷேத்திரங்களாக புகழ் பெற்று விளங்குகின்றன.

தன் தவறை உணர்ந்தான் பகீரதன். அவன் சப்த ரிஷிகளைத் தாண்டிச் செல்லும் போது அவர்களது ஆசி பெறாமல் சென்றது மிகப் பெரிய தவறு என்றும் உணர்ந்தான்.

பகீரதன் சப்த ரிஷிகளையும் வணங்கி னான். “தவ முனிவர்களே! கங்கை என் பின்னால் வரவேண்டியது அவசியமாகிறது. அதன் காரணமாகவே நான் தங்களை வேண்டுகிறேன்” என்று கேட்டான்.

அவர்கள் அனுமதிக்க, இப்போது கங்கையை முன்னே அனுப்பி, அவன் பின்னாலேயே வழிநடத்திச் சென்றான்.

வழியில் யமுனையையும், சரஸ்வதியையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு திரிவேணி சங்கமமாகி, பின்னர் காசி வழியாக தன் பயணத்தினை தொடர்ந்தாள் கங்கை.

பகீரதன் விருப்பப்படி தென்கிழக்கு திசையில் ஓடி வங்கக் கடலில் சங்கமமானாள் கங்கை பூமி வளம் பெற்றது.

பகீரதன் தனது மூதாதையர்களின் அஸ்தியினை கங்கையில் கரைத்து, அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையும் செய்தான்.

## கம்ச வதம்

அக்ரூரர் கம்சனின் ஆணைக்கு இணங்க பலராமகிருஷ்ணர்களைச் சந்திக்க தூது சென்றார். கம்சன் தனுர்யாகம் செய்ய விருந்தான். அதற்கு அழைப்பு விடுக்கவே அக்ரூரர் கிளம்பிச் சென்று கொண்டிருந்தார்.

கம்சனின் நோக்கம் விபரீதமானது என்பதனையும் அக்ரூரர் அறிவார். இருப்பினும் கிருஷ்ணரை நேரில் சந்திக்கும் பாக்கியம் வாய்த்திருக்கிறதே! என்ற எண்ணத்தில்தான் கிளம்பிச் சென்றார்.

ஒரு சந்தேகமும் எழுந்தது.

"கம்சனின் ஆள்' என்று கிருஷ்ணர் தன்னை ஒதுக்கி விடுவாரோ! என்றும் நினைத்தார்.

அடுத்த நொடியே, "இல்லை! பகவான் கிருஷ்ணருக்கு யாவும் தெரியும். நிச்சயம் என்னை புரிந்து கொள்வார். என்னை ஆலிங்கனம் பண்ணவும் செய்வார்' என்றும் எண்ணினார்.

ஆயர்பாடியை அடைந்தார் அக்ரூரர். இருள் கவிந்தது. தங்கள் மாடுகளுடன் மேய்ச்சல் முடிந்து வீட்டிற்கு திரும்பினர் பலராம கிருஷ்ணர்கள்.

இரு கரங்களையும் கூப்பி அவர்களை எதிர்கொண்டார் அக்ரூரர். கிருஷ்ணர் அவரைப் பார்த்ததுமே தன்னோடு கட்டி ஆலிங்கனம் செய்து கொண்டார்.

"அக்ரூரரே! மதுராபுரியிலிருந்து வந்துள்ளீர். மிகுந்த களைப்புடன் இருப்பீர். முதலில் நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். பின்னர் பேசலாம்" என்றார்.

அரண்மனைக்கு அழைத்துச் சென்று அவரை நன்கு உபசரித்து ஓய்வெடுக்கச் செய்தனர். அக்ரூரர் கிருஷ்ணரின் பெருந் தன்மையினைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந் தார்.

அவரது ஓய்விற்குப் பின்னர் எழுந்து அமர்ந்தார். அங்கே பலராம கிருஷ்ணர் களோடு, நந்த கோபரும் வந்து சேர்ந்தார்.

"அக்ரூரரே! கம்சனுடைய ஆட்சியில் மக்கள் நலமுடன் வாழ்கிறார்களா? நீங்கள் நலம் தானே!" என்று கேட்டார் நந்தகோபர்.

அதற்கு அக்ரூரர், "தங்களைப் போன்று நானும் நலமே!" என்று புன்னகைத்தார்.

கிருஷ்ணர் கேட்டார்.

"அக்ரூரரே! என் தாய் தந்தையரைக் கம்சன் சிறையில் அடைத்திருப்பதாக

கேள்விப்பட்டேன். அவர்கள் எப்படி உள்ளனர்?"

அக்ரூரர் தலைகுனிந்து கொண்டார். அதற்கு பதில் அளிக்கத் தயங்கினார்.

மேலும் பல கேள்விகளையும் கேட்டனர். ஒன்று விடாமல் பதில் சொல்லிக் கொண்டே வந்தார் அக்ரூரர்.

கிருஷ்ணர் கேட்டார்.

"அக்ரூரரே! கம்சன் திடீரென்று தனுர் யாகம் செய்யக் காரணம் என்ன? மாமா வுக்கு எங்கள் மேல் திடீரென்று பிரியம் கொள்ளக் காரம் என்ன?"

அக்ரூரர் கூறினார்.

"சுவாமி! நாரதர் கம்சனைக் காண வந்திருந்தார். கம்சனைக் கொல்லப் பிறந்த, தேவகியின் எட்டாவது குழந்தை தாங்கள் தான் என்று சொல்லிவிட்டுப் போனார். அதன் காரணமாகவே தனுர் யாகம் என்ற காரணம் காட்டி தங்களை வரவழைத்து கொல்வதற்கு திட்டம் தீட்டியுள்ளான் உங்கள் தாய் மாமன்..." என்றார்.

கிருஷ்ணர் புன்னகைத்தார்.

"எங்கள் மாமன் என்னைக் கால்வதற்கு என்ன ஏற்பாடுகளையெல்லாம் செய்துள்ளார்?" என்று வினவினார்.

அக்ரூரர் தொடர்ந்தார்.

"பகவானே! மதுராபுரியின் வாசலில் கம்சனின் பட்டத்து யானையான குவலாய பீடம் தங்களை எதிர்பார்த்துக் காத்து நிற்கும். ஆயிரம் யானைகளின் பலம் கொண்ட அதற்கு வெறியூட்டப்பட்டிருக்கிறது.

அதிலிருந்து நீங்கள் தப்பிவிட்டால் சாணூரான், முஷ்டிகன் என்ற மல்லர்களான இரு அரக்கர்கள் உங்களை போருக்கு அழைப்பர்.

மேலும் கம்சன் தனது சேனாதிபதிகள் பலரையும், பல்வேறு ஆயுதங்களுடன் நீங்கள் தப்பி விடாமல் கொல்வதற்கு ஆணையிட்டுள்ளான்" என்று முடித்தார்.

பலராமகிருஷ்ணர்கள் அதையெல்லாம் கேட்டு சிரித்துக் கொண்டனர்.

கிருஷ்ணர் கூறினார்.

"அக்ரூரரே! தாங்கள் நன்றாக ஓய் வெடுத்துக் கொள்ளுங்கள். நாளையே நாம் மதுராபுரிக்கு கிளம்புகிறோம். நாங்களும் எங்கள் மாமனைப் பார்த்து நெடுநாட்களாகி விட்டது" என்றார்.

மறுநாளே கிளம்பினார்.

நந்தகோபரின் பரிவாரங்கள் யமுனை நதியின் கிளை நதியான காளாங்கி நதியின் அருகில் வந்ததும் ரதங்களை நிறுத்தச் செய்தார் கிருஷ்ணர்.

"அனைவரும் இங்கே கைகால்களைச் சுத்தம் செய்துவிட்டு, சற்றே களைப்பாறி, பின்னர் கிளம்பிச் செல்லலாம்" எனப் பணிந்தார்.

எல்லோரும் அப்படியே செய்தனர். சிலர் அப்புண்ணிய நதியில் நீராட விரும்பி ஸ்நானம் செய்தனர்.

அக்ரரர் ஸ்நானம் செய்ய விரும்பி காயத்ரீ மந்திரத்தை உச்சரித்தபடி நீரில் மூழ்கினார். அங்கே நீருக்குள் பலராமனும், கிருஷ்ணரும் புன்முறுவலோடு வீற்றிருப்பதைக் கண்டார். வியப்பின் உச்சிக்கே சென்றார்.

‘இதென்ன விந்தை? இருவரும் ரதத்தில் அல்லவா அமர்ந்திருந்தனர். இங்கே நீருக்குள் எப்படி வந்தனர்’ என்று குழம்பினார்.

நீருக்கு வெளியே வந்தார். கரையில் பார்த்தார். அங்கே தேரில் பலராம கிருஷ்ணர்கள் அமர்ந்தபடி பேசிக் கொண்டிருந்தனர்.

அக்ரூரர் குழம்பினார்.

‘அப்படியானால் நீருக்குள் இருப்பது யார்?’ என்று நினைத்தபடி மீண்டும் நீருக்குள் மூழ்கினார்.

அங்கேயும் பலராமகிருஷ்ணர்கள் வியாபித்திருந்தனர்.

அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே பலராமர் ஆயிரம் தலைகளை உடைய ஆதிசேஷனாக காட்சியளிக்க, அவருடைய மடியில் கிருஷ்ணர் நாராயணராக சயனித் திருப்பதையும் பார்த்தார். மகாலட்சுமி ஹரியின் பாதங்களை பிடித்துவிட்டபடி அமர்ந்திருந்தாள்.

மேலும் தேவர்கள் அனைவரும் சுற்றிலும் தத்தமது கடமைகளை ஆற்றியபடியிருந்தனர்.

அக்ரூரர் உள்ளம் மகிழ்ந்தார்.

“ஸ்ரீஹரியே! தங்களை வணங்குகிறேன். உன்னில் யாவையும் அடக்கம். யாவும் உன்னில் இருந்தே தொடங்கின. உன் அருளால் உன்னைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன்” என்று தன் மனதிற்குள் துதித்துக் கொண்டிருந்தபோதே கிருஷ்ணர், அக்ரூரர் கண்ட காட்சியை யெல்லாம் மறையச் செய்துவிட்டார்.

அக்ரூரர் ஸ்நானத்தை முடித்துக் கொண்டு கரையேறினார்.

கிருஷ்ணர் புன்முறுவலுடன், "அக்ரூரரே! உமது முகம் பிரகாசிக்கிறதே! என்ன அற்புதத்தைக் கண்டீர்...?" என்று கேட்டார்.

அதற்கு அக்ரூரர், "கிருஷ்ணா! யாவும் நீயே! உன்னைவிட பெரிய அற்புதத்தை நான் எங்கே காண்பது?" என்று அதிசயித்தார்.

அன்று அந்திசாயும் நேரம் அனைவரும் மதுராபுரி எல்லையை அடைந்தனர்.

அக்ரூரர் அவர்களிடம், "தாங்கள் அனைவரும் என் வீட்டிற்கு விருந்தினர்களோடு வந்து தங்க வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்கு கிருஷ்ணர், "அக்ரூரரே! மதுராபுரிக்கு நாங்கள் வந்த காரியம் முடிந்ததும் நிச்சயம் உமது வீட்டிற்கு விருந்தினராக வருகிறோம்" என்று வாக்களித்தார்.

அக்ரூரர் பிரியா விடைபெற்றுச் சென்று விட, அன்றிரவு நந்நவனம் ஒன்றில் அவர்கள் தங்கினர்.

மறுநாள்.

மதுராபுரியின் சாலைகளையெல்லாம் கடந்து தனுர் யாகம் நடக்கும் யாக சாலையினை அடைந்தனர். யாகத்திற்கு தேவையான பெரிய வில் பூஜைகள் செய்யப்பட்டு தயாராக இருந்தது.

அந்த வில்லுக்கு காவலாக பலரும் நின்றனர். அந்த வில்லை எடுத்துப் பார்க்க பலராமரும், கிருஷ்ணரும் ஆவல் கொண்டனர்.

ஆனால் அருகில் செல்லக் கூடாது என்று காவலர்கள் தடுத்தனர்.

காவலர்களை விலக்கித் தள்ளிவிட்டு கிருஷ்ணர் அந்த வில்லை எடுத்தார்.

ஒரு கையால் தூக்கி அலட்சியமாக நாணேற்றினார். அது பெரும் ஓசையுடன் படீரென்று இரண்டாக முறிந்தது.

அதனைக் கண்டவர்கள் யாவரும் பிரமித்துப் போயினர்.

காவலர் தலைவர் அங்கே ஓடி வந்தான். "இவர்கள் இருவரையும் பிடித்துக் கட்டுங்கள்" என்று கட்டளையிட்டான்.

பலராமரும், கிருஷ்ணரும் ஒடிந்த வில்லை ஆளுக்கு ஒரு பாகமாக எடுத்துக் கொண்டனர். தங்களை பிடிக்க வந்த காவலர்களை அதையே ஆயுதமாகக் கொண்டு தாக்கத் தொடங்கினர்.

அடி வாங்கியவர்கள் அனைவரும் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள். கிருஷ்ணரும், பலராமரும் தங்கள் இடத்திற்கு திரும்பினர்.

அரண்மனையில் கம்சன் தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தான்.

நகரத்திற்குள் பலராம கிருஷ்ணர்கள் வந்திருந்து அட்டகாசம் செய்துவிட்டுத் திரும்பியதை செவியுற்றதிலிருந்தே உள்ளம் பேதலித்துப் போயிருந்தான்.

மறுநாள்.

பொழுது புலர்ந்தது.

கிருஷ்ணரும், பலராமரும் நகருக்குச் செல்ல ஆயத்தமானார்கள்.

கம்சன் தனது பட்டத்து யானையான குவலாய பீடத்தை கோட்டை வாசலுக்கு அனுப்பி வைத்தான்.

அடுத்ததாக மல்லர்களை அழைத்து, போட்டி நடக்கும் இடத்திற்குச் செல்லுமாறு பணித்தான்.

அவர்கள் கிளம்பிச் சென்றனர். போட்டி நடைபெறும் இடம் மக்களால் நிரம்பிப் போயிருந்தது.

கிருஷ்ணரும் பலராமரும் கோட்டை வாயிலை அடைந்தனர்.

குவலாய பீடம் அவர்களை வழிமறித்தது. அந்த யானை மதமேற்றப்பட்டிருந்தது.

கிருஷ்ணர் பாகனைப் பார்த்து, "பாகனே! உன் யானையை அப்பால் போகச் செய். உனது மன்னனின் அழைப்பை ஏற்றே நான் இங்கு வந்துள்ளேன். அதனால் வழியை விடச் செய். இல்லையேல் உன்னையும், யானையையும் கொல்ல வேண்டியது வரும்!" என்று எச்சரித்தார்.

பாகன் அவரது எச்சரிக்கையை அலட்சியப் படுத்தினான்.

அங்கு வந்தால் யானையைக் குத்தி அவர்கள் மீது ஏவினான்.

யானை கிருஷ்ணரை தன் துதிக்கையால் பற்றித் தூக்கியது.

கிருஷ்ணர் நழுவினார். யானையின் கால்களுக்குள் புகுந்து பின்புறமாக வந்தார்.

யானையின் வாலைப் பற்றிச் சுழற்றத் தொடங்கினார். யானை அலறியது.

பின்னர் யானையின் முதுகில் தாவி ஏறி தலைக்கு வந்தார். யானையின் தலையில் ஓங்கிக் குத்தினார். பாகனைப் பிடித்து ஆகாயத்தை நோக்கி வீசினார்.

கீழே குதித்தார் கிருஷ்ணன். யானை கிறுகிறுத்துப் போய் நின்றது.

இப்போது யானையின் தந்தங்களைப் பற்றி ஒடிக்கத் தொடங்கினார்.

யானை அலறியது. அதன் தந்தங்கள் ஒடிந்ததும் ரத்தம் பீறிடத் தொடங்கியது.

அந்தத் தந்தங்களைக் கொண்டே யானையைத் தாக்கத் தொடங்கினார்.

யானை வேதனை தாங்காமல் கீழே சரிந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அதன் உயிர் அடங்கிப் போனது.

பட்டத்து யானை கொல்லப்பட்ட செய்தி கம்சனைப் போய்ச் சேர்ந்தது.

கிருஷ்ணரும், பலராமரும் முன்னேறிச் சென்று கொண்டிருந்தனர்.

சாணூரானும், மூஷ்டிகனும் அவர்களை வழிமறித்தனர்.

கிருஷ்ணர் எச்சரித்தார்.

"மரியாதையாக வழிவிடுங்கள்" என்றார்.

ஆனால் அவர்களோ, "பொடியர்களே! உங்களுக்கு என்ன திமிர்?" எங்களைக் கடந்து செல்ல முற்பட்டால் உங்கள் உயிரை இழக்க நேரிடும்" என்றனர்.

கிருஷ்ணர் சாணூரான் மீது பாய்ந்தார். பலராமர் முஷ்டிகனோடு மோதினார்.

பலராம கிருஷ்ணர்களின் தாக்குதலுக்கு மல்லர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை.

கிருஷ்ணர் சாணூரானைப் பற்றித் தூக்கி தலைக்கு மேலாகச் சுற்றி வீசினார்.

அவன் உயரமாக பறந்து போய் மீண்டும் தரையில் வீழ்ந்தான்.

பலமாக அடிபட்டு ரத்தம் கக்கிச் செத்தான்.

பலராமன் முஷ்டிகனின் மேல் ஏறி அமர்ந்து கொண்டு சரமாரியாகத் தாக்கினார்.

அந்தத் தாக்குதல்களைத் தாங்க முடியாமல் நசுங்கிப் போய் செத்தான் முஷ்டிகன்.

மேலும் அவர்களை எதிர்த்த கம்சனின் சேனாதிபதிகளையெல்லாம் கொன்று குவித்தனர்.

கம்சன் வாளை உருவிக் கொண்டு கிருஷ்ணர் மீது பாய்ந்தான்.

கிருஷ்ணர் லாவகமாக விலகி கம்சனை சரமாரியாகத் தாக்கினார்.

நிலை தடுமாறிக் கீழே விழுந்தான் கம்சன்.

அவன் மீது ஏறி அமர்ந்து கொண்டு, அவன் நெஞ்சில் ஓங்கி குத்துவிட்டார் கிருஷ்ணர்.

கம்சன் ரத்தம் கக்கி பரிதாபமாக உயிர் விட்டான்.

கம்சனின் தம்பியர் எட்டுப்பேர் எதிர்த்து வந்தனர். கிருஷ்ணரும், பலராமலும் அவர்களையும் கொன்று குவித்தனர்.

பின்னர் சிறைச்சாலைக்குச் சென்று தனது தாய் தந்தையரை விடுதலை செய்தனர். நாட்டு மக்களெல்லாம் மகிழ்ந்து போயினர்.

❑❑❑

# வெற்றி வேல் வீர வேல்

முருகப் பெருமானின் இரண்டாம் படை வீடான திருச்செந்தூரில் நடக்கும் சூரசம்ஹார விழாவைத் தரிசித்தால், பாவ நிவர்த்தி ஏற்படும். வெற்றி வடிவேலனாக அவர் உலா வரும் காட்சியைக் காண கண்கள் கோடி வேண்டும்.

## கந்த சஷ்டி விழா நோக்கம்

ஒரு சமயம் முனிவர்கள் சிலர், உலக நன்மைக்காக ஒரு புத்திரன் வேண்டுமென, ஐப்பசி மாத அமாவாசையன்று துவங்கி, ஆறு நாட்கள் யாகம் நடத்தினர். யாக குண்டத்தில் எழுந்த தீயில் இருந்து, ஒவ்வொரு நாளும் ஒரு வித்து வீதமாக ஆறு வித்துக்கள் சேகரிக்கப்பட்டன. அந்த வித்துக்களை ஆறாம் நாளில் ஒன்றாக்கிட, முருகப் பெருமான் அவதரித்தார்.

இவ்வாறு முருகன் அவதரித்த நாளே கந்தசஷ்டி என மகாபாரதம் கூறுகிறது. கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாச்சாரியார், "அசுரர்களை எதிர்க்கும் வல்லமையைப் பெற, தேவர்கள் முருகனின் அருள் வேண்டியும் ஐப்பசி மாத வளர்பிறையிலிருந்து ஆறு நாட்கள் கும்பத்தில் முருகனை எழுந்தருளச் செய்து, நோன்பு இருந்தனர். முருகனும் சூரர்களை அழித்தார். இதுவே கந்த சஷ்டி" என்கிறார்.

## 12 நாள் விழா

மற்ற முருகத்தலங்களில் கந்தசஷ்டி விழா ஆறு நாட்களே நடக்கும். திருச்

செந்தூரில் கந்தசஷ்டியின், முதல் ஆறு நாட்கள் சஷ்டி விரதம், சூரசம்ஹாரம், ஏழாம் நாளில் முருகன், தெய்வானை திருக்கல்யாணம், அடுத்து 5 நாட்கள், சுவாமி திருக்கல்யாண கோலத்தில் ஊஞ்சல் சேவை என 12 நாட்கள் கொண்டாடப்படும்.

## சஷ்டி யாகம்

திருச்செந்தூரில் கந்தசஷ்டி விழாவின் முதல் நாள் அதிகாலையில், ஹோம மண்டபத்திற்கு மூலவரின் பிரதிநிதியாக வள்ளி, தெய்வானையுடன் ஜெயந்திநாதர் (முருகன்) எழுந்தருளுவார். அறுகோண வடிவில் அமைக்கப்பட்ட ஹோம குண்டத்தில் முருகனின் வெற்றிக்காக யாகம் துவங்கும். குண்டத்தை சுற்றிலும் சிவன், அம்பிகை, நான்கு வேதங்கள், முருகன், வள்ளி, தெய்வானை, மகா விஷ்ணு, விநாயகர், சப்தகுருக்கள், வாஸ்து பிரம்மா, தேவர்கள், சூரியன், அஷ்டதிக் பாலகர்கள், துவாரபாலகர்கள் ஆகிய தேவதைகளை கும்பத்தில் எழுந் தருளச் செய்வர். உச்சிக்காலம் வரையில் நடக்கும் யாகசாலை பூஜை முடிந்தவுடன் ஜெயந்திநாதர், சண்முக விலாச மண்டபத்திற்கு எழுந்தருளுவார். ஆறாம் நாளன்று வள்ளி, தெய்வானை இல்லாமல் தனித்து கடற்கரைக்கு எழுந்தருளி சூரனை சம்ஹாரம் செய்வார். அதன் பின், வெற்றிவேந்தராக வள்ளி, தெய்வானை யுடன் யாகசாலைக்கு திரும்புவார்.

## கண்ணாடிக்கு அபிஷேகம்

ஜெயந்திநாதர், சூரனை சம்ஹாரம் செய்த பின்பு பிரகாரத்திலுள்ள மகா

தேவர் சந்நிதிக்கு எழுந்தருளுவார். அப்போது சுவாமியின் எதிரே ஒரு கண்ணாடி வைக்கப்படும். அர்ச்சகர், கண்ணாடியில் தெரியும் ஜெயந்திநாதரின் பிம்பத்திற்கு அபிஷேகம் செய்வார். இதை சாயாபிஷேகம் என்பர். 'சாயா' என்றால் 'நிழல்' போரில் வெற்றி பெற்ற முருகனை குளிர்விக்கும் விதமாக இந்த அபிஷேகம் நடக்கும்.

## தெய்வானை திருக்கல்யாணம்

சூரசம்ஹாரத்திற்கு மறுநாள் முருகன், தெய்வானை திருக்கல்யாணம் நடக்கிறது. அசுரனை எதிர்த்து வெற்றி பெற்றதற்காக இந்திரன், தெய்வானையை முருகனுக்கு திருமணம் செய்து தந்தார். அன்று காலையில், தெய்வானை தபசு மண்டபம் சென்று, முருகனை மணந்து குமரவிடங்கர் (உற்சவர் முருகன்), முருகனின் பிரதிநிதியாக மயில் வாகனத்தில் தபசு மண்டபம் சென்று தெய்வானைக்கு மாலை சூட்டி நிச்சயதார்த்தம் செய்வார். நள்ளிரவில் இருவரும் திருக்கல்யாண மண்டபத்திற்கு எழுந்தருள, அங்கு திருமணம் நடக்கும்.

## இருப்பிடம்

திருநெல்வேலியில் இருந்து
60 கிலோ மீட்டர்.

நிற்கும் நேரம்: காலை 5 - இரவு 9.

போன்: 04639 242 221.

# சந்திராஷ்டம பாதிப்பா!

## சுகமளிக்கிறார் கலா சந்திரன்

சந்திராஷ்டம் காலத்தில் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க, விழுப்புரம் மாவட்டம் இரும்பை மாகாளம், மகாகாளேஸ்வரர் கோயிலில் உள்ள கலா சந்திரனை வணங்கி வரலாம்.

சிவனிடம் வரம் பெற்ற அம்பன், அம்பாசுரன் என்ற அசுரர்கள் பார்வதி தேவியை திருமணம் செய்து கொள்ள விரும்பினர். பிறன் மனைவியை விரும்பிய அவர்களை, மகாகாளி அவதாரம் எடுத்து வதம் செய்தாள் பார்வதி. இதனால் பிரம்மஹத்தி தோஷம் பிடித்த அம்பாள், இத்தலத்தில் சிவனை நோக்கி தவம் செய்து தோஷம் நீங்கப் பெற்றாள். பிற்காலத்தில் மகாகாள மகரிஷி, தனது சிவத்தல யாத்திரையின் போது, இத்தலத்தின் மகிமையை அறிந்து லிங்கம் பிரதிஷ்டை செய்து வணங்கினார். சுவாமிக்கு அவரது பெயரால் 'மகாகாளநாதர்' என்ற பெயர் வந்தது.

கடுவெளிச்சித்தர், இத்தலத்தில், உள்ள அரச மரத்தின் அடியில் சிவனை எண்ணி தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது நாட்டில் மழை பெய்யாமல் மக்கள் வறுமையில் வாடினர். சித்தரின் தவத்தால்தான் நாட்டில் மழை பெய்யவில்லை என்று எண்ணிய மன்னன் ஒரு தேவதாசியின் மூலம் அவரது தவத்தை கலைத்தான்.

சித்தர் தவம் கலைந்தபோது, அவர் மீது சந்தேகம் கொண்டு அவரை எழுப்பியதாக மன்னன் கூறினான். அவனுக்காகவும், மக்களுக்காகவும் மீண்டும் தவ வாழ்க்கையை தொடராமல், சிவப்பணி மட்டும் செய்தார். அதன்பின் நாட்டில் மழை பெய்தது. மக்கள் பஞ்சம் நீங்கப் பெற்று, சிவனுக்கு விழா எடுத்தனர். விழாவில் சுவாமி ஊர்வலமாக சென்றபோது, அவருக்கு முன்பாக சித்தரின் தவத்தை கலைந்த தேவதாசி

நடனமாடிச் சென்றாள். அப்போது, அவளது காலில் அணிந்திருந்த சிலம்பு கீழே கழன்று விழுந்தது. சித்தர், சிலம்பை எடுத்து அவளது காலில் அணிவித்துவிட்டார். இதைக் கண்ட மக்கள், சித்தரின் செயலை தவறாக பேசினர். கோபமடைந்த சித்தர் சிவனை நோக்கி, "தான் உதவி செய்ததை இம்மக்கள் தவறாக எடுத்து விட்டார்களே! அவர்களுக்காகத்தானே நான் தவத்தை கூட விட்டேன்!" என்று சிவனை வேண்டினார்.

தன் பக்தனான சித்தருக்கு சோதனை வந்ததால், கோயிலில் இருந்த சிவலிங்கம், மூன்று பாகங்களாக வெடித்துச் சிதறியது. உண்மையை உணர்ந்த மன்னன், சித்தரிடம் மன்னிப்பு கேட்டான். சித்தரும் அவனை மன்னித்து சிவன் மீது பாடல் பாடினார். சிதறிய லிங்கத்தின் பாகங்கள் ஒன்று சேர்ந்தன. பின் சிவன், சித்தருக்கு காட்சி தந்து முகதி கொடுத்தார்.

**குயில்மொழி நாயகி**

அம்மன் குயில்மொழி நாயகி தாமரை மலர் பீடத்தில், தெற்கு பார்த்து மகாலட்சுமியின் அம்சத்துடன் அருளுகிறாள். பேச்சு சரியாக வராதவர்கள், இசை கற்பவர்கள், இசைக் கலைஞர்கள் அம்பாளுக்கு தேன் அபிஷேகம் செய்து வழிபட்டு, அதனை நாக்கில் தடவிக் கொள்கின்றனர். இவ்வாறு செய்வதால் குரல் வளம் சிறக்கும், கலைகளில் சிறந்து விளங்கலாம் என்பது நம்பிக்கை.

**கலா சந்திரன்**

இக்கோயில் பிரகாரத்தில் சந்திரன், மேற்கு பார்த்தபடி இருக்கிறார். இவரது இடது கையில் ஏடு இருக்கிறது. இவரை 'கலா சந்திரன்' என்கிறார்கள். கல்வி, கலைகளில் சிறந்து விளங்கவும், மனோதிடம் அதிகரிக்கவும் இவரை வழிபடலாம். ஒருவருக்கு மாதத்தில்,

உத்தேசமாக, இரண்டரை நாள் வரை சந்திராஷ்டமம் வரும். இந்த காலத்தில் மனோதிடம் குறையும். செயல்களில் தடை உண்டாகும் எனபது ஜோதிட விதி. இந்த பாதிப்பு சந்திராஷ்டம காலத்தில் ஏற்படக் கூடாது என வேண்டி, கலாசந்திரனுக்கு பால்சாதம் நைவேத்யம் செய்து வழிபடலாம். நவக்கிரக சந்நிதியில் உள்ள கிரகங்கள் துணைவியருடன் இருக்கின்றனர்.

**சிறப்பம்சம்**

இத்தல லிங்கம் மூன்று பாகங்களாக பிளந்து, மூன்று முகங்களுடன் இருக்கிறது. மூன்று பாகங்களையும் ஒரு செம்பு பட்டயத்தில் கட்டி வைத்து பூஜை செய்கின்றனர். இங்குள்ள தல விநாயகர் சுந்தர கணபதி. நடராஜரின் கால் சற்று மடங்கியிருக்கிறது. இதனை சந்தோஷ கோலம் என்கிறார்கள். நடராஜரையும் சிவகாமியம்மனையும் சுற்றி அக்னி வளையம் இருக்க, அதன் மத்தியில் காட்சி தருவது வித்தியாசமானது. முருகன் ஆறு முகங்களுடன் மயில் மீது அமர்ந்து வள்ளி, தெய்வானையுடன் உள்ளார். கால பைரவர் சந்நிதியும் உள்ளது.

**இருப்பிடம்**

புதுச்சேரி திண்டிவனம் சாலையில்
10 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள
திருச்சிற்றம்பலம் கூட்ரோட்டில் இருந்து
பிரியும் சாலையில் 2 கிலோ மீட்டர்.

**திறக்கும் நேரம்**

காலை 6.30 - 12, மாலை 4 - 8.
போன்: 0413 268 8943

**AMAANUSHYA NOVEL**

Published & Owned by **A.J.MURALI** at New No.104 (Old No.45/1), Nainar Nadar St., Mylapore, Chennai - 600 004. Printed at R.Murugan, Wonder Prints, Triplicane, Chennai-600 005.

Editor: **A.J.MURALI**